விலை: 60.00
பக்கங்கள் - 20

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com

Registered as a News Paper in Sri Lanka

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



# வலம்புரி
## சங்குநாதம்

சங்கு 26
ஒலி 080 வள்ளுவர் ஆண்டு 2056 மாசி 25 ஞாயிற்றுக்கிழமை (09.03.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

### உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பில் ஆராய
## இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழு இன்று கூடுகின்றது

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

வவுனியாவில் இன்று முற்பகல் கூட்டம் நடைபெறவுள்ளதாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சத்தியலிங்கம் தெரிவித்தார்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் இதன்போது விசேட அவதானம் செலுத்தப்படும் என அவர் கூறியுள்ளார்.

19ஆம் பக்கம் பார்க்க

### யாழில் மாணவர்களை இலக்கு வைத்து
## போதை தயாரித்து விற்கப்படும் இடம் பொலிஸாரால் முற்றுகை

### 24 வயது இளைஞன் கைது

(யாழ்ப்பாணம்)

யாழில் மாணவர்களை இலக்கு வைத்து போதைப்பொருள் தயாரித்து விற்கப்படும் இடம் பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டுள்ளது.

இதன் போது

19ஆம் பக்கம் பார்க்க



சிறப்புக் கட்டுரையாளர்
அன்பு ஜவஹர்சா
எழுதும்



### அதிபர், ஆசிரியர்களின் சம்பளம்...

விசேட கட்டுரை நாளை உங்கள் வலம்புரியில்

(ஆ-ர்)

### பிணைமுறி மோசடி வழக்கு
# ரணிலுக்கு எதிராக விசாரணை தொடரும்

(கொழும்பு)

மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி வழக்குத் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி ரணிலுக்கு எதிராக விசாரணை மேற்கொள்ளப்படும் என பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்துள்ளார். (19ஆம் பக்கம் பார்க்க)



## கரவெட்டியில் மாணவன் சடலமாக மீட்பு

(கரணவாய்)

நெல்லியடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கரவெட்டி மேற்கில் 14 வயது மாணவன் ஒருவன் நேற்று முன்தினம் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதில் அதேபகுதியைச் சேர்ந்த நகுலேஸ்வரன் ஜக்சன்

19ஆம் பக்கம் பார்க்க

### கச்சாய் தெற்கில்
## கல்சியம் நீக்கியை அருந்திய குடும்பஸ்தர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)


கொடிகாமம் கச்சாய் தெற்கில் கல்சியம் நீக்கியை அருந்திய குடும்பஸ்தர் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த யோகேஸ்வரன் (வயது-64) என்பவரே உயிரிழந்தவராவார்.

குறித்த நபர் நேற்று முன்தினம் அவரது வீட்டிலிருந்த கல்சியம் நீக்கித் திரவத்தை அருந்தியுள்ளார்.

19ஆம் பக்கம் பார்க்க

## 'பிள்ளைகளை ஒவ்வொரு நாளும் தேடித் தேடி நீதியின்றி இறந்து கொண்டிருக்கிறோம்'
### உறவுகள் வட்டுவாகலில் போராட்டம்




03ஆம் பக்கம் பார்க்க

## ரணிலின் தொங்குபாலத்திலேயே அநுர அரசு பயணிக்கின்றது
### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ரணிலின் தொங்கு பாலத்திலே பயணிக்கிறது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய ஊழியர் சங்கத்தின் பிரதிநிதிகளுடன் நேற்று முன்தினம் நடைபெற்ற சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

19ஆம் பக்கம் பார்க்க



### நிலையான பங்குதாரராக
## ஐ.எம்.எப் செயற்படும்
### ஜனாதிபதியிடம் ஐ.எம்.எப் பணிப்பாளர்

(கொழும்பு)

இலங்கையின் நிலையான பங்குதாரராக ஐ.எம்.எப் செயற்படும் என ஐ.எம்.எப் முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்நிலை சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரி

19ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 17.05.1954

விண்ணில் 19.02.2005

அமரர்

## கருணைவேல் தேவநாயகி

திதி : 09.03.2025

இருபது ஆண்டுகள் கழிந்தாலும் ஓவியமாய் பதிந்திருக்கிறது
உங்கள் முகம்! காவியமாய் வாழ்ந்தீர்கள்
உம்மை காலமெல்லாம் நினைத்திருப்போம்
தேனினிய உங்கள் குணம் தேடி நாம் உருகுகின்றோம்
ஆண்டவன் காலடியில் உங்கள்
ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

(C-2409)

துவாளி வீதி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி(அருண்சோ மில் உரிமையாளர்)

கணவர் - கருணைவேல்
பிள்ளைகள் - அரும்செல்வி,
சந்திரிகா, ஜனகன்

# மரண அறிவித்தல்

பிறப்பு
1969 - 12 - 28



இறப்பு
2025 - 02 - 26

## திருமதி சரஸ்வதி தவராசசிங்கம்

(ஆசிரியர் - யாழ்/ எழுதுமட்டுவாழ் கணேஷா வித்தியாலயம்)

வேம்பொடுகேணி, பளையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி தவராசசிங்கம் அவர்கள் 26.02.2025 அன்று அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஸ்ணபிள்ளை - செல்லாச்சி தம்பதியினரின் ஏகபுத்திரியும் தவராசசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் கி.சொர்க்கலிங்கம்(ப.நோ.கூ.சங்கம், கொடிகாமம்) அவர்களின் சகோதரியும் சொ.மனோகரி(வலயக்கல்வி அலுவலகம் - கிளிநொச்சி வடக்கு) அவர்களின் மைத்துனியும் சொ.சுலக்சிகா அவர்களின் மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 09.03.2025 ஞாயிற்றுக்கிழமை அன்னாரது சகோதரனின் இல்லத்தில் காலை 10.00 மணியளவில் இடம்பெற்று வேம்பொடுகேணி குருடிகாடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
077 956 7419

(C-2411)

# உள்நாட்டு துப்பாக்கி, மான்கொம்பு கஞ்சாவுடன் வவுனியாவில் 5 பேர் கைது

(வவுனியா)

உள்நாட்டு துப்பாக்கிகள், மான் கொம்பு மற்றும் கஞ்சா போதைப் பொருளுடன் வவுனியாவில் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர்.

வவுனியா பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து வவுனியா, பாவற்குளம் படிவம் 2 பகுதியில் சோதனை மேற்கொண்டனர்.

இதன்போது உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கிகள் இரண்டு மீட்கப்பட்டதுடன் அதனை உடமையில் வைத்திருந்த ஒருவரிடம் இருந்து 2 கிராம் கஞ்சா மற்றும் இரண்டு மான் கொம்புகளும் மீட்கப்பட்டன.

இதனையடுத்து அதனை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் அப்பகுதியைச் சேர்ந்த 32 மற்றும் 27 வயதுடைய இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

அத்துடன் நீதிமன்றினால் இரண்டு பிடிவிறாந்து விதிக்கப்பட்ட நிலையில் தலைமறைவாக இருந்த 25 வயதுடைய இளைஞர் ஒருவரும் இதன்போது கைது செய்யப்பட்டார்.

குறித்த மூவரும் வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டு உளுக்குளம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

மேலும் வவுனியா, கோவில்குளம் பகுதியில் மாடு திருடிய சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் நீதிமன்றின் வழக்கு விசாரணைக்கு ஆஜராகாத காரணத்தினால் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ட பாவற்குளம் படிவம் 2 பகுதியைச் சேர்ந்த மேலும் இருவரும் இதன்போது மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டு வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட நபர்களிடம் மேலதிக விசாரணைகளின் பின் உளுக்குளம் மற்றும் வவுனியா பொலிஸார் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-7,250)

# ஞானசார தேரருக்கு எதிராக சி.ஐ.டியில் முறைப்பாடு

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குல் தொடர்பில் பல்வேறு கருத்துக்களை வெளியிட்டு வரும் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு எதிராக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடொன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

சிறையில் இருந்து விடுதலையாகியதன் பின் தொடர் ஊடக சந்திபுக்கள் ஊடாக ஞானசாரதேரர் உயிர்த்த ஞாயிறு தாக்குல் தொடர்பில் பல்வேறு கருத்துக்களை வெளியிட்டு வரும் நிலையில், அவரின் கருத்து தொடர்பில் உரிய விசாரணைகளை முன்னெடுக்குமாறு வலியுறுத்தியே இலஞ்ச ஊழல் வீண்விரயத்துக்கு எதிரான பிரஜைகள் அமைப்பினர் குறித்த முறைப்பாட்டை பதிவு செய்துள்ளனர்.

அண்மையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதும், உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரி யார் என்பது மற்றும் அதனுடன் தொடர்புடைய பல விடயங்களை தாம் அறிந்திருப்பதாக ஞானசார தேரர் தெரிவித்திருந்தார்.

அத்துடன் இந்த விடயங்களை ஜனாதிபதி உள்ளிட்ட உயர் அதிகாரிகளுக்கு தாம் வெளிப்படுத்தத் தயாராக இருப்பதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையிலேயே, இந்த விடயம் தொடர்பில் உரிய விசாரணைகளை மேற்கொள்ளுமாறு குறித்த முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

# பணி இடங்களில் துன்புறுத்தப்படும் பெண்கள்

## சபையில் சஜித் தெரிவிப்பு

பெண்களுக்கெதிரான பணியிட வன்முறை மற்றும் பல்வேறு வகையான துன்புறுத்தல்கள் காரணமாக நாட்டின் ஒவ்வொரு நபரினதும் வேலை நாட்கள் பாதிப்புறுவதாக ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இதேவேளை பணியிடத்தில் 75 வீத ஆண்கள் பெண்களிடம் நியாயமற்ற முறையில் நடந்து கொள்வதாக அறிக்கைகள் காட்டுவதாகக் கூறிய எதிர்க்கட்சித் தலைவர், இந்த ஆண்கள் பெண்களை வேலைக்கு அமர்த்துவதையும் அவர்களை முன்னேற்றுவதையும் தடுக்க பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகக் கூறினார்.

நாட்டில் பழமைவாத முதலாளிகள் பணியிடத்தில் பெண்களை வேலைக்கு அமர்த்த தயங்குவதாகவும் அறிக்கை கூறுவதாக சஜித் பிரேமதாஸ சுட்டிக் காட்டினார். (ம-7)


## புளோரன்ஸ் நேர்சிங் முதியோர் பராமரிப்பு இல்லம்



எங்களுடைய சேவைகள்

- நீண்ட கால படுக்கை நோயாளிகளை சுத்தமாக பராமரித்தல்
- அங்கம் இழந்தவர்களை அன்பாக பராமரித்தல்
- தனிமையில் மன அழுத்தத்தில் வாழ்பவர்களை பராமரித்தல்
- உங்களுடைய தொழில் மற்றும் குடும்ப சூழ்நிலை காரணமாக பெற்றோரை கவனிக்க முடியாதவர்கள் எங்களிடம் அனுமதியுங்கள்.
- விடுமுறைக்காக வெளியூர் செல்பவர்கள் நாட்கள் அடிப்படையிலும் வார அடிப்படையிலும் எம்மிடம் விட்டுச் செல்லலாம்.

மிகவும் குறைவான கட்டணத்தில் நிறைவான சேவைகள்

தொடர்புகளுக்கு
077 718 6438 / 077 482 4473
கந்தரோடை சுன்னாகம் (வற்றாகி அம்மன் கோவிலடி)

(C-2410)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியை மூடி மறைக்காதே!



## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் போராட்டம்

(முல்லைத்தீவு)

**முல்லைத்தீவு மாவட்டத்தில் 8 வருடங்களுக்கு மேலாக நீதி கோரி போராட்டம் மேற்கொண்டு வரும் முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப் பட்டவர்களின் உறவினர்கள், கவனயீர்ப்புப் போராட் டம் ஒன்றை நேற்று முன்னெடுத்துள்ளனர்.**



முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப் பட்டவர்களின் உறவினர்கள் கடந்த 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் எட்டாம் திகதி ஆரம்பித்த தொடர் கவன யீர்ப்பு போராட்டமானது தொடர்ந்து இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது.

முல்லைத்தீவு கோத்தபாய கடற்படை முகாமிற்கு முன் பாக ஆரம்பிக்கப்பட்ட போராட் டமானது வட்டுவாகல் பாலம் ஊடாகப் பேரணியாக சென்று வட்டுவாகல் பகுதியில் இறு தியாக கையளிக்கப்பட்ட இடத்திற்கு முன்பு வரை சென்று போராட்டம் நிறை வடைந்திருந்தது.

போராட்டத்தின் போது சர்வதேசமே பதில் சொல், சர்வதேசமே எமக்கான தீர்வு என்ன! பிள்ளைகளைத் தினம் தேடிக்கொண்டே நீதி யின்றி இறந்து கொண்டிருக் கின்றோம், கொக்குதொடு வாய் மனிதப் புதைகுழி விட யத்தை மூடி மறைக்க வேண்டாம்! எமக்கு உண் மையும் நீதி யும் வேண்டும், தமிழரை கடத்தாதே!, இன அழிப்பு செய்யாதே!, உங்கள் சிறைக்கூடம் எங்கள் பிள் ளைகளுக்கு என்ன கல்விக் கூடமா?, எமது நாட்டில் நாம்வாழ உரிமையில்லையா?, உலகமெல்லாம் பெண்கள் உரிமை பேசும் இந் நாளிலும் தெருவில் கிடந்து அழவைத் திருக்கிறது அரசு, போன்ற பல்வேறு கோசங்களையும் எழுப்பி பதாகைகளை தாங்கிய வாறு போராட்டத்தை மேற் கொண்டிருந்தனர். (நி-8-299)

## தென்னந்தோட்ட உரிமையாளர்களுக்கு உரமானியம்

(கொழும்பு)

5 ஏக்கருக்கும் குறைவான தென்னந்தோட்ட உரிமை யாளர்களுக்கு உரமானியம் வழங்கப்படவுள்ளது.

ரஷ்யாவிலிருந்து இலவச மாகப் பெறப்பட்ட 55,000 மெற்றிக் தொன் MOP உரத்தில் 27,500 மெற்றிக் தொன் உரத்தை பயன்படுத்தி 56,000 மெற்றிக் தொன் கலப்பு உரத்தைத் தயாரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, குறித்த கலப்பு உரத்தை 4,000 ரூபாய் மானிய விலையில் விற் பனை செய்யத் தீர்மானித் துள்ளதாகப் பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்ட மைப்பு வசதிகள் அமைச்சு தெரிவித்துள்ளது. 50 கிலோ கிராம் கலப்பு உரமூடை யொன்றின் தற்போதைய சந்தை விலை 9,500 ரூபா வாகும். நாடளாவிய ரீதியில் தெங்குச் செய்கையாளர்களுக் காக மானிய விலையில் விநி யோகிக்கப்படவுள்ள கலப்பு உரத்தை இம்மாத இறுதியில் வழங்க திட்டமிட்டுள்ளதாகப் பெருந்தோட்ட மற்றும்சமூக உட் கட்டமைப்பு வசதிகள் அமைச்சு தெரிவித்துள்ளது. (நி-8)

## இலங்கையின் முன்னேற்றத்திற்கு ஐ.எம்.எப் வாழ்த்து

(கொழும்பு)


இலங்கை அடைந்துள்ள குறிப்பிடத்தக்க முன்னேற்றத் திற்காக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவை வாழ்த் துவதாகச் சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாக இயக்குநர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா தெரிவித்தார். காணொளி தொழில்நுட்பம் மூலம் ஜனா திபதி அநுரகுமார திஸாநாயக் கவுடன் நடத்திய சந்திப்பு குறித்து தனது X கணக்கில் பதிவிடும் போது அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்தார்.

முதலீட்டை ஈர்த்து வாழ்க் கைத் தரத்தை மேம்படுத்து வதன் அவசியம் குறித்து ஜனா திபதியுடன் கலந்துரையாடிய தாக அவர்மேலும்தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத் தின் வழிகாட்டுதலின் கீழ் சீர் திருத்தங்களின்முக்கியத்துவமும் விவாதித்ததாக தெரிவித்தார். (நி-8)

## திருக்கோணேஸ்வரத்தின் திருப்பணிகளை இந்திய அரசு செய்து தரவேண்டும்

### குகதாசன் எம்.பி கோரிக்கை



(திருமலை)

திருக்கோணேஸ்வரத்தின் திருப் பணிகளை இந்திய அரசு செய்து தர வேண்டும் என திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஊடகங்களுக்கு அனுப்பி வைத் துள்ள அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

தென்கயிலை என போற்றப்படு வதும் ஐந்து ஈச்சரங்களில் ஒன்றானதும் திருஞானசம்பந்தரால் பாடல் பெற்ற துமான திருக்கோணேஸ்வரத்தின் திருப்பணிகள் நீண்ட காலமாக முடிவுறாமல் நிலுவையில் உள்ளன.

இந்திய அரசானது, மற்றுமொரு பாடல் பெற்ற தலமான திருக்கேதீச்சரர் கோவில் திருப்பணிகளைச் செய்து முடித்தது போல திருக்கோணேஸ் வரத்தின் திருப்பணிகளையும் செய்துதர வேண்டும்.

அந்த வகையில் இராஜகோபுரம் அமைத்தல், மணிமண்டபம் அமைத் தல், சக்திபீடம் அமைத்தல் வெளி வீதி அமைத்தல், பஞ்சலிங்கங்களை திரு நிலைப்படுத்தல், முதலிய திருப்பணி களை விரைந்து செய்து முடிக்க ஆக்கமும் ஊக்கமும் அளிக்க வேண் டும் என இந்திய அரசை வினையமாக வேண்டிக் கொள்கின்றேன் என அவர்தெரிவித்தார். (நி-8)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்.

### வேலாயுதன் ஸ்ரீதயாபரன்

(கண்ணன்)



தோற்றம் 11.07.1979

மறைவு 12.03.1922

கண்ணா...!
பிரமன் எழுதிய விதி
நூற்றாண்டுகள்
மனித உருவில் வந்த
காலன் நாற்பதில்
பறித்து விட்டான்.
காலம் பதில் சொல்லும்
வரை காத்திருப்போம்.

உன் பிரிவினால் கண்ணீர் மல்கும் :

அம்மா, அக்காமார், அண்ணாமார், அத்தான்மார், மருமகள்

திருவேரகம், உடுப்பிட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ‘ஆஹா’ அஷ்நாத், அனுஷாந்த்

# ‘வடக்கின் பெரும் போர்’ ...... ‘வாகை சூடியது’ சென்.ஜோன்ஸ்

## மீண்டும் சரிந்தது யாழ்.மத்திய கல்லூரி





அணித்தலைவர் அஷ்நாத்தின் சகலதுறை ஆட்டமும், அனுஷாந்தின் நிதானமான துடுப்பாட்டமும் கைகொடுக்க வடக்கின் பெரும் போரின் 118 ஆவது அத்தியாயத்தில் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 5 விக்கெட்டுக்களால் வாகைசூடியது.

இந்த வெற்றியுடன், 118 வடக்கின் சமர்களில் சென்.ஜோன்ஸ் கல்லூரி 40ஆவது வெற்றியைப் பதிவுசெய்து அசத்தியது.

இதன்மூலம் வடக்கின் சமரில் கடந்த 5 அத்தியாயங்களில் தொடர்ச்சியாக முடிவு கிட்டியுள்ளதுடன் சென்.ஜோன்ஸ் கல்லூரி தொடர்ச்சியான இரண்டாவது வெற்றியைப் பதிவு செய்துள்ளது.

“வடக்கின் பெரும் போர்" என வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மற்றும் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணிகளுக்கிடையிலான 118 ஆவது கிரிக்கெட் அத்தியாயம் கடந்த 6ஆம் திகதி யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் அரங்கேறியது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற சென்.ஜோன்ஸ் கல்லூரி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.மத்திய கல்லூரி அணி, அஷ்நாத்தின் பந்துவீச்சில் சிக்கி தமது முதல் இன்னிங்ஸுக்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து வெறும் 131 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணி சார்பில் அன்ரன் நிரேஷான் அபிஷேக் 27, ரஞ்சித்குமார் நியூட்டன் 24, சதாகரன் சிமில்டன் 24, மதீஸ்வரன் கார்த்திகன் 15 ஓட்டங்களை அதிக பட்ச ஓட்டங்களாகப் பெற்றுக் கொண்டனர்.

பந்துவீச்சில் சென்.ஜோன்ஸ் கல்லூரி சார்பில் அணித்தலைவர் அஷ்நாத் 38 ஓட்டங்களைக் கொடுத்து 5, முர்ஃபின் ரெண்டியோ 25 ஓட்டங்களைக் கொடுத்து 2, குகதாஸ் மாதுலன் 27 ஓட்டங்களைக் கொடுத்து 2, நாகேஷ்வரன் கிரிஷான் 6 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

தொடர்ந்து தமது முதல் இன்னிங்ஸுக்காக களமிறங்கிய சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி ரேமன் அனுஷாந்த், அணித்தலைவர் அஷ்நாத்தின் சிறந்த துடுப்பாட்டத்தின் மூலம் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 181 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் ரேமன் அனுஷாந்த் 86, ஜெயச்சந்திரன் அஷ்நாத் 29, கிருபாகரன் சஞ்சுதன் 22, முர்ஃபின் ரெண்டியோ 20, ஜோன் ஆர்னல்ட் 11 ஓட்டங்களை எடுத்தனர்.

பந்துவீச்சில் யாழ்.மத்திய கல்லூரி அணி சார்பில் ரஞ்சித்குமார் நியூட்டன் 62 ஓட்டங்களைக் கொடுத்து 5, முரளி திசோன் 47 ஓட்டங்களைக் கொடுத்து 2, தகுதாஸ் அபிலாஷ் 15 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

50 ஓட்டங்கள் பின்னணியில் தமது 2ஆவது இன்னிங்ஸை ஆரம்பித்த யாழ்.மத்திய கல்லூரி அணி பொறுப்பற்ற முறையில் துடுப்பெடுத்தாடி நேற்று முன்தினம் 2ஆம் நாள் ஆட்ட நேர நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 135 ஓட்டங்களை மட்டுமே எடுத்துத் தத்தளித்தது.

இந்நிலையில் நேற்றுக் காலை தமது 2ஆவது இன்னிங்ஸைத் தொடர்ந்த யாழ்.மத்திய கல்லூரி அணி 3ஆம் நாளாட்டத்தில் மேலதிகமாக 7 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து 142 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

துடுப்பாட்டத்தில் சுதாகரன் சிமில்டன் 34, தகுதாஸ் அபிலாஷ் 28, கணேசலிங்கம் மதுசுதன் 17, முரளி திசோன் 16, விக்னேஸ்வரன் பாருதி ஆட்டமிழக்காமல் 13 ஓட்டங்களை எடுத்தனர்.

பந்துவீச்சில் ஜெயச்சந்திரன் அஷ்நாத் 54 ஓட்டங்களுக்கு 3, குகதாஸ் மாதுலன் 17 ஓட்டங்களுக்கு 2, உதயணன் அபிஜோய்ஷாந்த், முர்ஃபின் ரெண்டியோ ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

93 ஓட்டங்கள் என்ற சுண்டங்காய் வெற்றியிலக்கை நோக்கி தமது 2ஆவது இன்னிங்ஸை ஆரம்பித்த சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி, ஓட்டங்கள் எதுவும் எடுக்காமல் தமது முதல் விக்கெட்டைப் பறிகொடுத்த போதிலும் உதயணன் அபிஜோய்ஷாந்த் 33, அணித்தலைவர் ஜெயச்சந்திரன் அஷ்நாத் ஆட்டமிழக்காமல் பெற்ற 29 ஓட்டங்கள் துணையுடன் 5 விக்கெட்டுக்களை இழந்து 93 ஓட்டங்கள் எடுத்து வெற்றியிலக்கை அடைந்தது.

பந்துவீச்சில் யாழ்.மத்திய கல்லூரி அணி சார்பில் முரளி திசோன் 29 ஓட்டங்களைக் கொடுத்து 2, ரஞ்சித்குமார் நியூட்டன் 37 ஓட்டங்களைக் கொடுத்து 2, தகுதாஸ் அபிலாஷ் 11 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இதற்கு அமைய வடக்கின் சமரில் 118 பருவகாலப் போட்டிகள் நிறைவடைந்த நிலையில் சென்.ஜோன்ஸ் கல்லூரி 40 : 29 என்ற விகிதத்தில் தொடர்ந்தும் முன்னிலை வகிக்கிறது. (ம-7,33)



ஆட்டநாயகன் மற்றும் சிறந்த பந்து வீச்சாளர் அஷ்நாத் (சென்.ஜோன்ஸ்)



சிறந்த துடுப்பாட்ட வீரர் அனுஷாந்த் (சென்.ஜோன்ஸ்)



சிறந்த களத்தடுப்பாளர் அபிஷேக் (யாழ்.மத்திய கல்லூரி)



சிறந்த விக்கெட் காப்பாளர் சஞ்சுதன் (சென்.ஜோன்ஸ்)



சிறந்த சகலதுறை வீரர் நியூட்டன் (யாழ்.மத்திய கல்லூரி)

## ‘பொன் அணிகள் போர்’

## 52 ஆண்டுகளுக்கு பின்னர் பற்றிக்ஸை வீழ்த்தி வரலாறு படைத்தது யாழ்ப்பாணக் கல்லூரி




(யாழ்ப்பாணம்)

மதுசனின் 11 விக்கெட் பெறுதி கைகொடுக்க பொன் அணிகளின் போரில் 52 வருடங்களின் பின்னர் சென்.பற்றிக்ஸ் கல்லூரியை முதற் தடவையாக வீழ்த்தி யாழ்ப்பாணக் கல்லூரி வெற்றிக் கனியைச் சுவைத்தது.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நேற்று சனிக்கிழமை நிறைவடைந்த 108 ஆவது பொன் அணிகளின் போரில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியை 59 ஓட்டங்களால் வெற்றி கொண்டு யாழ்ப்பாணக் கல்லூரி அணி வரலாறு படைத்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி அணி தமது முதல் இன்னிங்ஸில் 153 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

தொடர்ந்து தமது முதல் இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடிய சென்.பற்றிக்ஸ் கல்லூரி 167 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

14 ஓட்டங்கள் பின்னிலையில் தமது 2ஆவது இன்னிங்ஸை ஆரம்பித்த யாழ்ப்பாணக் கல்லூரி கபிசன் (35 ஓட்டங்கள்) மற்றும் மதுசன் (32 ஓட்டங்கள்) ஆகியோரின் துடுப்பாட்டத்தின் உதவியுடன் 159 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

146 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கினை நோக்கி தமது 2ஆவது இன்னிங்ஸ் துடுப்பாட்டத்தைத் தொடர்ந்த சென்.பற்றிக்ஸ் கல்லூரியை மதுசன், விஷ்ணுகோபன் போட்டுத் தாக்க வெறும் 86 ஓட்டங்களுக்கு சுருண்டு 59 ஓட்டங்களால் வீழ்ந்தது. இதன்மூலம் யாழ்ப்பாணக் கல்லூரி அணி வரலாற்று வெற்றியைப் பதிவு செய்தது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணேஸ்வரம் ஆலய திருப்பணி தொடர்பில் இந்தியத் தூதரக அதிகாரிகள் ஆராய்வு





திருக்கோணேஸ்வரம் ஆலய எதிர்காலத்திருப் பணி தொடர்பாக ஆராய்ந்து கொள்வதற்கு இந்திய தூதரக உயர் அதிகாரிகள் நேற்று ஆலயத்துக்கு விஜயம் மேற்கொண்டு பல விடயங்களை கேட்டறிந்தனர்.

அகில இலங்கை இந்து மாமன்ற உபதலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன், ஆலய நிர்வாக சபைத் தலைவர், உறுப்பினர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இந்தியப் பிரதமரிடம் கோணேஸ்வரத் திருப்பணிக்கு உதவுமாறு கேட்கப்பட்டமை தொடர்பில் அவர்கள் கவனம் எடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# மகளிர் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற மருத்துவமுகாம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி உருத்திரபுரம் உழவர் ஒன்றிய விளையாட்டு மைதானத்தில் எசட்லைன்ஸ் பைனாஸ் பிறைவேட் லிமிடெட் இனால் இலவச மருத்துவ முகாம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டுள்ளது

ஆரோக்கியமான பெண்கள் வலிமையான சமூகம் என்ற தொனிப் பொருளில் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு குறித்த மருத்துவ முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(நி-8-315)

# மகளிர் தினத்திற்கு வாழ்த்து தெரிவித்த கூகுள்



(வோஷிங்டன்)

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி கூகுள் நிறுவனம் விசேட காட்சிப்படுத்தலை தனது முகப்பு பகுதியில் வெளி யிட்டுள்ளது.

அறிவியல், மருத்துவம், விண்வெளி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் பணியாற்றி வரும் பெண்களைக் குறிக்கும் வகையிலான காட்சிகள் இதில் காணப்படுகின்றன. மகளிரைப் போற்றும் வகை யில் இது அமைந்துள்ளதாகப் பயநர்கள் தெரிவித்து வருகின்றனர். (நி-8)

# யுத்தத்தின் கொடூர வடுக்களை அலைபேசிக்குள் அடையாளப்படுத்திய வெளிநாட்டு சுற்றுலா பயணிகள்





(முல்லைத்தீவு)

வடக்கு நோக்கி படையெக்கும் சுற்றுலா பயணிகள் யுத்தத்தின் வடுக்களை தாங்கிய நிலையில். காணப்படும் பனை மரங்களையும் கட்டடங்களையும் தமது கையடக்க தொலைபேசிகளில் ஆர்வத்துடன் புகைப்படம் எடுத்து வருவதனை அவதானிக்க முடிகிறது.

கடந்த 2000 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் யுத்த சூனியப்பிரதேசமாக காணப்பட்ட முகமாலை பகுதியில் மக்கள் மீள் குடியேறி 15 ஆண்டுகள் கடந்துள்ளன.

குறிப்பாக இந்தப் பிரதேசத்தில் குண்டுகள் துளைக்கப்பட்டு சின்னா பின்னமாக்கப் பட்ட கட்டடங்கள் அவை தவிர குண்டுகளால் துளையிடப்பட்டும் குண்டுத் துகள் கள் தாங்கிய பனைமரங்களும் காணப்படுகின்றன.

நோர்வே நாட்டின் உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் யுத்தத்தால் சேதமடைந்த பனை மரத்தில் இருக்கின்ற எச்சங்களை பார்த்து வியந்து போய் அவர்களின் அலைபேசிகளில் அதைப் புகைப்படமாக அடையாளப்படுத்திக் கொண்டனர். (நி-8-315)



கொக்குவில் மத்திமேற்கு கிராம அலுவலர் பிரிவின் கிராம மட்ட அலுவலர்களின் ஏற்பாட்டில் சர்வதேச மகளிர் தினம் நேற்று சனிக்கிழமை கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக திருமதி.கலைவாணி அகிலன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம் சங்கானை), சிறப்பு விருந்தினராக திருமதி சுலக்சனா சஞ்ஜீவன் (அகில இலங்கை சமாதான நீதவான், இயக்குநர் சுலக்சனா பியூட்டி கெயார் அன்ட் அக்கடமி பிறைவட் லிமிடெட்) ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனந்த யோகாலயாவின் ஆண்டு நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

வல்வை ஆனந்த யோகாலயாவின் 8 ஆவது ஆண்டு நிறைவு விழா வல்வை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை மண்டபத்தில் எதிர்வரும் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு கலாநிதி.எஸ்.இராஜேந்திரன் தலைமையில் ஆரம்பமாகவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வா.மணிகண்டன் (msc yoga நிறுவனர் ஆனந்த யோகாலயா இந்தியா), சிறப்பு விருந்தினராக செல்வி DR பா.ஷாலினி BE,PhD (yoga) (தலைவர் ஆனந்த யோகாலயா இந்தியா) ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

யோகாசனப் பரீட்சையில் தேர்ச்சி பெற்றோருக்கான சான்றிதழ்கள் வழங்குதல், மூத்த , இளைய தலைமுறையினர் சேர்ந்து வழங்கும் செயல் வடிவங்கள்,யோகாசனபயிற்சியின் நன்மைகளை விளக்கும் உரைகள் என்பன நடைபெறும். (நி-8)

# வரணியில் நாயன்மார் குருபூஜை

(யாழ்ப்பாணம்)

வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்மன் அறநெறிப் பாடசாலையில் நாயன்மார் குருபூஜை நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

மேற்படி நிகழ்வில் பிள்ளைகள் மற்றும் பெற்றோரை கலந்து கொண்டு பயனடையுமாறு சைவப் புலவர் கமலநாதன் கேட்டுக்கொண்டுள்ளார்.(நி-8-30)

# பெண் விடுதலைச் சிந்தனை அமைப்பின் சர்வதேச பெண்கள் தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பெண் விடுதலைச் சிந்தனை அமைப்பின் ஏற்பாட்டில் சர்வதேச பெண்கள் தின நிகழ்வு "பொருளாதார நெருக்கடியும் பெண்கள் எதிர்கொள்ளும் சவால்களும்" எனும் தொனிப் பொருளில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் கொக்குவில் சந்தியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம் பெறவுள்ளது.

பெண் விடுதலைச் சிந்தனை அமைப்பின் செயலாளர் பிரசாந்தி தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் ஊடகவியலாளரும் சமூக செயற்பாட்டாளருமான துளசி முத்துலிங்கம், சட்டத்தரணி கார்த்திகா, சுயதொழில் முயற்சியாளரும் சமூக ஆர்வலருமான இரத்னேஸ்வரி ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கவுள்ளனர். (நி-8)

# நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் அடிகளாரின் முப்பொன்விழா நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் சுவாமி ஞானப் பிரகாசர் அடிகளாரின் பிறப்பின் முப்பொன்விழாவை கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இளையோர் மத்தியில் அடிகளாரின் பல்துறைசார் பணிகளை அறியச் செய்வதை நோக்கமாகக் கொண்டு யாழ்ப்பாண மறைமாவட்டம், யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம், யாழ்.அமல மரித்தியாகிகள் மாகாணம் ஆகிய அமைப்புக்கள் இணைந்து இவ் விழாவைக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள்ளச் செய்துள்ளன. இதன் தொடக்க நிகழ்வானது இம் மாதம் 13 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் வளர்ந்த ஊராகிய அச்சுவேலியில் கலாசாரப் பவனியுடன் ஆரம்பமாகவுள்ளது.

அன்றைய தினம் காலை 8.30 மணிக்கு அச்சுவேலி பேருந்து நிலையத்திலிருந்து கலாசாரப் பவனி ஆரம்பிக்கப்பட்டு புனித திரேசாள் பாடசாலையில் அரங்க நிகழ்வுகளுடன் நிறைவடையவுள்ளது.



முப்பொன் விழாவின் தொடர் செயற்பாடுகளாக பாடசாலை மட்டத்தில் கட்டுரை, பேச்சுப் போட்டிகள் மற்றும் ஆய்வரங்கம், ஆய்வுநூல் வெளியீடு, மலர் வெளியீடு, நிறைவு விழா போன்ற பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக உயர் பட்டப் படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் தி.வேல் நம்பியின் வழிகாட்டலுக்கு அமைய நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் சமயப் பணி, வரலாற்றுப் பணி, சமூகப் பணி, மொழிப்பணி போன்றவை உள்ளடக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை பெற்றுக்கொள்ளப்படவுள்ளன.

ஜூன்,ஜூலை மாதங்களில் பாடசாலை மட்டப் போட்டிகளும் அதனைத் தொடர்ந்து ஓகஸ்ட் அல்லது ஒக்டோபர் மாதத்தில் ஆய்வரங்கும், செப்ரெம்பர் மாதமளவில் நிறைவு விழா அரங்க நிகழ்வுகள் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கும் நடைபெறவுள்ளன. (நி-8)

# கலைஞர் ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் அலகின் அனுசரணையில் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகமும், வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலகமும் கலாசாரப் பேரவைகளும் இணைந்து நடத்தும் கலைஞர் ஒன்று கூடல் நிகழ்வு இன்று காலை 9 மணிக்கு பூர்வீக நாகதம்பிரான் ஆலய முன் வீதி யில் இடம்பெறவுள்ளது என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (நி-8-60)

# திருவுருவப்படம் திரைநீக்கமும் நினைவுரைகளும்

(யாழ்ப்பாணம்)

பள்ளம்புலம் முருகமூர்த்தி சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் அமரர் சதாசிவம் மகாலிங்கம் அவர்களின் திருவுருவப் படம் திரை நீக்கமும் நினைவுரைகளும் எதிர்வரும் 13 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சரவணை பள்ளம்புலம் முருகமூர்த்தி திருக்கோவில் நால்வர் மணி மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. (நி-8)


## மணமகன் தேவை

1996, இந்து, பரணி, TEACHER
பூர்வீகம் –யாழ்ப்பாணம், வதியுமிடம் – விசுவமடு
மணமகள் பதிவு இல: 11518.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401 (சி-094)
www.EQMarriageService.com

## மணமகள் தேவை

1978, இந்து, சதயம், ENGINEER
பூர்வீகம் – நல்லூர், வதியுமிடம் – AUSTRALIA
மணமகன் பதிவு இல: 11511.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401 (சி-094)
www.EQMarriageService.com


# இராசிபலன்

09.03.2025
மாசி 25, ஞாயிற்றுக்கிழமை
தசமி முற்பகல் 11.25 மணிவரை

புனர்பூசம் பின்னிரவு 2.51மணிவரை
சுபநேரம்9.24-10.54 மணிவரை
இராகுகாலம் 4.54 - 6.24 மணிவரை

சந்திராஷ்டமம்- கேட்டை

வளவன்

**மேஷம்:** வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காணும் நாள், உற்சாகத்தோடு செயற்படுவீர்கள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்யும் நாள், போசன சுகமுண்டு.

**ரிஷபம்:** தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, புதிய முயற்சி ஒன்றில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மிதுனம்:** வியாரத் தொடர்புகள் அனுகூலம் தரும், நினைத்த காரியம் நல்ல விதமாக அமையும், கௌரம் மிக்கவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**கடகம்:** காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும், அன்றாடப் பணிகள் நன்றாக நடைபெற ஆண்டவனைப் பிரார்த்திப்பீர்கள், விலை உயர்ந்த பொருட்களைக் கவனமாகக் கையாள்வது நல்லது.

**சிம்மம்:** குடும்பத்தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்,பொருளாதார நிலையில் திருப்தி காணும் நாள்.

**கன்னி:** உங்கள் திறமைகள் வெளிப்படும் நாள், அறை குறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், வருமானம் பெருக வழியமைத்துக் கொள்வீர்கள், கௌரவமான நாள்.

**துலாம்:** கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும் தடைகளைத் தகர்த்தெறிந்து தன்னிறைவு காணும் நாள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், விடா முயற்சிக்கு வெற்றி கிடைக்கும்

**விருச்சிகம்:** சிந்தித்துச் செயற்பட்டுச் சிறப்புக்களைக் காணும் நாள், பொது வாழ்வில் கௌரவக் குறைவான சம்பவங்கள் இடம் பெறலாம், வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள்.

**தனுசு:** எடுத்த காரிங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.

**மகரம்:** உறவினர் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், கடன் பிரச்சினைகளைச் சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், போசன சுகமுண்டு, முயற்சிகள் கை கூடும்.

**கும்பம்:** பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, செய்தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், இனிமையான நாள்.

**மீனம்:** உறவினர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, மனதில் இனம் புரியாத சந்தோ சம் குடிகொள்ளும், வாகன சுகமுண்டு, பேச்சில் கனிவு பிறக்கும்.

நல்ல யோசனையைக் கேட்காதவர்கள் துன்பம் அடைவார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10 நிமிட மோதல்
## பரபரத்த வெள்ளை மாளிகை!

**“அமெரிக்க ஜனாதிபதி ஆனவுடன் உக்ரைன் போரை உடனடியாக நிறுத்துவேன்” என வீராப்புக் காட்டினார் டொனால்ட் ட்ரம்ப். ஆட்சிக்கு வந்தவுடன் இதற்காக ரஷ்ய ஜனாதிபதி புடினைத் தொலைபேசியில் அழைத்துப் பேசிய ட்ரம்ப், உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியை வெள்ளை மாளிகைக்கு அழைத்துப் பேசினார். அந்தப் பேச்சுவார்த்தையில் மோதல் வெடிக்க, உலக அளவில் தலைப்புச் செய்தியானது அந்தச் சம்பவம்!**



• ஜூனியர் விகடன் •



வெள்ளை மாளிகையின் ஓவல் அலுவலகத்தில், துணை ஜனாதிபதி ஜே.டி.வான்ஸுடன் இணைந்து ஜெலன்ஸ்கியைச் சந்தித்தார் ட்ரம்ப். நேரலையில் ஒளிபரப்பப்பட்ட இந்தச் சந்திப்பின் முதல் 30 நிமிடங்கள் சுமுகமாகவே சென்ற நிலையில், அடுத்த 10 நிமிடங்கள் அதகளமாகினது துணை ஜனாதிபதி வான்ஸ், ஜெலன்ஸ்கிஅமைதிக்காக எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லையென்று குத்திக்காட்டும் நோக்கில், அமைதிக்கான பாதை என்பது இராஜ்ஜிய ரீதியான செயற்பாடுகளில் ஈடுபடுவது தான். அதைத்தான் ட்ரம்ப் செய்துகொண்டிருக்கிறார் என்று கூறினார். உடனடியாக இடைமறித்த ஜெலன்ஸ்கி, போருக்கு முன்பு ரஷ்யா எங்களைத் தாக்கியபோது, புடினை யாரும் தடுத்து நிறுத்தவில்லை. இப்போது எந்த இராஜ்ஜிய ரீதியான நடவடிக்கைகள் குறித்துப் பேசிக்கொண்டிருக்கிறீர்கள்.. என்ன சொல்ல வருகிறீர்கள்? எனக் கேட்டார்.

உங்கள் நாட்டை அழிவிலிருந்து தடுத்து நிறுத்தும் இராஜ்ஜிய நடவடிக்கைகள் குறித்துத்தான் பேசுகிறேன். அமெரிக்க ஊடகங்கள் முன்பாக அமர்ந்துகொண்டு தேவையற்ற பிரச்சினைகளை உருவாக்கி, அவமரியாதை செய்துகொண்டிருக்கிறீர்கள் என்றார் வான்ஸ். பத்திரிகையாளர்கள், கமராக்கள் நிறைந்திருந்த ஓவல் அறையைப் பதற்றமாக்கியது இந்த வாக்குவாதம். தொடர்ந்து, போரில் அனைவருக்கும் பிரச்சினைகள் இருக்கத்தான் செய்யும். வருங்காலத்தில் நீங்களும் அதை உணர்வீர்கள் என்றார் ஜெலன்ஸ்கி. இதனால் கோபமடைந்த ட்ரம்ப், இதை எங்களுக்குச் சொல்லும் இடத்தில் நீங்கள் இல்லை. நீங்கள் இந்தப் போரில் வெற்றி பெறப் போவதில்லை. பல லட்சம் மக்களின் வாழ்க்கையோடு விளையாடுகிறீர்கள். மூன்றாம் உலகப் போருக்கு வித்திடப் பார்க்கிறீர்கள் என்றார்.

அதற்கு ஜெலன்ஸ்கி, போரின் ஆரம்பத்திலிருந்தே நாங்கள் தனியாகவே இருக்கிறோம். அதேநேரம், அமெரிக்காவுக்கு நன்றியுணர்வுடன் இருக்கிறோம் என்றார். ட்ரம்ப்போ, நீங்கள் ஒன்றும் தனியாக இல்லை. அந்த முட்டாள் ஜனாதிபதி (பைடன்), உங்கள் நாட்டுக்கு 350 மில்லியன் அமெரிக்க டொலரை நிதியாக வழங்கியிருக்கிறார் என்றார் கோபத்துடன்.



மீண்டும் பேசிய வான்ஸ், 2024 பாராளுமன்றத் தேர்தலில், ஜனநாயகக் கட்சிக்கு (ஜோ பைடனுக்கு) ஆதரவாகப் பிரசாரம் செய்தீர்கள் என ஜெலன்ஸ்கி மீது குற்றம்சாட்டியவர், உக்ரைன் இராணுவத்தின் நடவடிக்கைகள் குறித்தும் விமர்சித்தார். போர் குறித்து நீங்கள் சத்தமாகப் பேசினால்.. என ஜெலன்ஸ்கி ஆரம்பிக்க, இடைமறித்தார் ட்ரம்ப். அவர் (வான்ஸ்) ஒன்றும் சத்தமாகப் பேசவில்லை என்று ட்ரம்ப் சொன்னவுடன், ஜெலன்ஸ்கியின் முகம் மாறியது. அதிருப்தியுடன் அங்கிருந்து பாதியிலேயே வெளியேறினார் ஜெலன்ஸ்கி. அதன் பிறகு நடக்கவிருந்த பத்திரிகையாளர் சந்திப்பு, வெள்ளை மாளிகையின் மதிய விருந்து ஆகியவற்றைப் புறக்கணித்துவிட்டுச் சென்றார் ஜெலன்ஸ்கி. ட்ரம்ப்போ, அமைதி வேண்டுமென்று நினைக்கும் போது திரும்பி வாருங்கள் என்று சமூக வலைத்தளத்தில் பதிவிட்டிருக்கிறார்.

### துணை ஜனாதிபதியின் ஆட்டம்?

இந்தச் சந்திப்பின்போது, அமெரிக்காவுக்கு உக்ரைனின் அரியவகை கனிமங்களை வழங்க ஒப்புக்கொள்ளும் ஒப்பந்தத்தில் ஜெலன்ஸ்கி கையெழுத்திடுவதாக இருந்தது. ஆனால், பதிலுக்கு, உக்ரைனின் பாதுகாப்புக்கு அமெரிக்கா உத்தரவாதம் அளிக்க வேண்டும் எனக் கேட்டிருந்தார் ஜெலன்ஸ்கி. அதற்கு ட்ரம்ப் மறுப்பு தெரிக்கவே, ஒப்பந்தம் கையெழுத்தாகவில்லை. ஜெலன்ஸ்கி பாதியில் வெளியேறி, அமெரிக்காவை அவமானப்படுத்திவிட்டார் என ட்ரம்ப் ஆதரவாளர்களும், நம் நாட்டுக்கு வந்த தலைவரை இப்படியா அவமதிப்பது? என ஜனநாயகக் கட்சி ஆதரவாளர்களும் வார்த்தைப்போரில் ஈடுபட்டுவரும் நிலையில், துணை ஜனாதிபதி வான்ஸின் செயற்பாடுகள் கடும் விமர்சனத்துக்கு உள்ளாகியிருக்கின்றன.

அமெரிக்க அரசியல் ஆய்வாளர்கள் சிலர், ஜெலன்ஸ்கியுடனான சண்டையைத் தொடங்கியது ட்ரம்ப் அல்ல, வான்ஸ்தான். 2016இல் ட்ரம்ப்பை முட்டாள், ஹிட்லரைப் போன்றவர் என்றெல்லாம் விமர்சித்த வான்ஸ், இப்போது ட்ரம்ப்பின் பக்கம் நிற்கிறார். ஜனாதிபதிக்கு அருகில் அமர்ந்து அவருக்கு உறுதுணையாக இருப்பது மட்டுமே துணை ஜனாதிபதியின் வேலை. இதுபோல இரு நாட்டுத் தலைவர்களின் சந்திப்பில் துணை ஜனாதிபதி பேசியதே வழக்கத்துக்கு மாறானது. 2028 இல் ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்கும் திட்டத்திலிருக்கும் வான்ஸ், உலக நாடுகளின் கவனத்தைத் தன் பக்கம் திருப்ப, ஜெலன்ஸ்கிக்கு எதிராக இப்படிப் பேசியிருக்கலாம் என்கின்றனர்.

### கைகோர்த்த ஐரோப்பிய ஒன்றியம்!

வெள்ளை மாளிகையில் நடந்த இந்தச் சம்பவத்துக்குப் பிறகு, ஐரோப்பிய நாடுகள் அனைத்தும் ஓரணியில் இணைந்து உக்ரைனுக்கு ஆதரவு தெரிவித்திருக்கின்றன. உக்ரைன் போர் குறித்த மாநாடு ஒன்றை லண்டனில் நடத்தியிருக்கிறது பிரிட்டன் அரசு. இதில், பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளின் தலைவர்கள் கலந்து கொண்டனர். மாநாட்டுக்குப் பிறகு, செய்தியாளர் சந்திப்பில் பேசிய பிரிட்டன் பிரதமர் கெய்ர் ஸ்டார்மர், உக்ரைனுக்குத் தொடர்ந்து இராணுவ உதவிகள் வழங்குவதோடு, ரஷ்யா மீது பொருளாதார அழுத்தத்தை அதிகரிக்க நாங்கள் கூட்டாக முடிவெடுத்திருக்கிறோம். உக்ரைனின் பாதுகாப்பையும் இறையாண்மையையும் உறுதிப்படுத்த வேண்டும். அதேபோல, சமாதான உடன்பாடு ஏற்பட்டால், எதிர்காலத்தில் உக்ரைன் மீதான படையெடுப்பைத் தடுக்க, தற்காப்புத் திறன்களை அதிகரிப்பதிலும் நாங்கள் ஒன்றாக நின்று செயற்படுவோம் என்று தெரிவித்திருக்கிறார்.

உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியோ, வரலாறு கண்டிராத வகையில் ஐரோப்பிய ஒற்றுமை உச்சம் தொட்டிருப்பதை, இந்த மாநாடு உணர்த்துகிறது. வலுவான ஆதரவு எங்களுக்கு இருப்பதாக உணர்கிறேன் என்றிருக்கிறார். தலைவர்களுக்கு இடையிலான ஈகோ மோதல்களை ஓரங்கட்டிவிட்டு, மூன்றாண்டுகளுக்கு மேலாக நடைபெறும் ரஷ்ய - உக்ரைன் போரை உடனடியாக நிறுத்த உலக நாடுகள் வழிவகை செய்ய வேண்டும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு



ஈஸ்வரநாதபிள்ளை



கே. ஆர். டேவிற்

**வாத்தியார்** வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர். தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார்.

**பண்டிதர்:-** பண்டிதர் ஈஸ்வரநாத பிள்ளை அவர்கள் காலமாகிவிட்டார் என்ற செய்தி அறிந்து மிகுந்த வேதனையடைகின்றோம்.

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் சுதுமலையை வசிப்பிடமாகவும் கொண்ட பண்டிதர் ஈஸ்வரநாத பிள்ளை அவர்கள் தமிழ் மொழியைக் கற்பிப்பதில் சிறந்து விளங்கியவர்.

சான்றாண்மை மிக்க மாணவர்களை உருவாக்கிய அவருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து வாத்தியார் வைத்திலிங்கம் எழுந்தார். ஈழத்தின் சிறந்த சிறுகதை எழுத்தாளரும் ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளருமாகிய கே. ஆர். டேவிற் அவர்கள் காலமாகிவிட்டார் என்ற செய்தி துயரம் தருவதாகும்.

ஈழத்துச் சிறுகதை எழுத்துலகில் அவர் ஆற்றிய பணி உன்னதமானது.

அவருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் மீண்டும் எழுந்து இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடி நிசப்தமாகியது. நிசப்தத்தை விதானையாரின் குரல் ஊடறுத்தது.

**விதானையார்:-** அது சரி, எங்கட யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின்ர நுண்கலைப் பீடத்தின்ர கன்ரினில இப்ப மீன் சாப்பாடு விற்கப்படுகுதாம்.

**கங்காணி:-** இதென்ன நாசமறுப்பு. யாழ்ப்பாணப்பல்கலைக் கழகத்தின்ர நுண்கலைப்பீடம் அமைந்த வளாகத்தில இரண்டு சிவன் ஆலயங்களும் ஒரு பிள்ளையார் கோவிலும் அமைந்துள்ளன.

அது தவிர, எந்தக் காலத்திலும் நுண்கலைப் பீடத்திற்குள்ள மாமிச உணவுகள் கொண்டு செல்லப்படுவதில்லை.

நுண்கலைப் பீடத்தில உள்ள இசைத்துறை, நடனத்துறை என் அனைத்தும் சிவப்பரம்பொருளுக்கான அர்ப்பணிப்புகள்.

ஆனால் இப்ப என்னவோ தெரியல்ல, நுண்கலைப்பீடக் கன்ரீனில இப்ப அவித்த முட்டை, மீன்சாப்பாடு விற்கினம் எண்டால், எங்கட சைவ சமயத்தின்ர நிலைமையை ஒருக்காச் சிந்தித்துப் பாருங்க.

**விதானையார்:-** சேர். பொன் இராமநாதன் நுண்கலைப்பீடத்தில மீன் சாப்பாடு விற்கப்படுவதை, இசையை தெய்வீகமாக மதிக்கின்ற கத்தோலிக்க சமயத்தவர்கள் கூட விரும்பவில்லை என்பது தான் இங்கு நாம் கவனிக்க வேண்டிய விடயம்.

**மூப்பர்:-** அப்ப விதானையார் மீன் சாப்பாடு விற்கிறதுக்கு ஆரு காரணம்.

**விதானையார்:-** யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில எஞ்சி இருக்கிற சைவ சமய அடிப்படைகளையும் இல்லாது செய்ய வேணும் எண்டு ஒரு தரப்பு கங்கணம் கட்டி நிற்குது. அதில சைவ சமயம் சார்ந்த விரிவுரையாளர்களும் இருக்கினம்.

**சாத்திரியார்:-** அதெண்டால் உண்மை தான்.

எங்கட யாழ்ப்பாணத்தில இருக்கிற புத்திஜீவிகளுக்கு - போர்க்காலச் சூழலிலும் இந்த மண்ணில இருந்த பாடுபட்டவர்களுக்கு இடம் கொடுக்காமல் கொழும்பை வாழ்விடமாகக் கொண்டவர்களை பேரவை உறுப்பினர்களாக நியமிக்கிறதில இருந்து இங்க என்ன நடக்குதென்பது தெரியுதல்லோ.

**கங்காணியார்:-** நீங்கள் இதைச் சொல்லுறியள் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் வளர்ச்சிக்காகத் தன்னை அர்ப்பணித்த முன்னாள் துணைவேந்தர் ஒருவரை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின்ர வேந்தராக நியமிப்பதற்கு ஒரு சில விரிவுரையாளர்கள் எதிர்ப்புத் தெரிவித்து கொழும்புக்குக் கடிதம் அனுப்பியுள்ளதாக யாழ். பல்கலைக்கழகத்தில கதை அடிபடுகுது.

**வாத்தியார்:-** என்ன இருந்தாலும் ஜனாதிபதி அநுரவின்ர அரசாங்கம் எதையும் நிதானமாக ஆராய்ந்து செய்யும் எண்டு நம்புறம்.

இதைவிட்டிட்டு அவர்களும் தங்களுக்குத் தெரிந்தவர்களின்ர கதையைக் கேட்டு பேரவை உறுப்பினர்கள் மற்றும் வேந்தர் பதவிக்கு நியமனம் வழங்குவார்களாக இருந்தால், முன்னைய ஆட்சி கொழுக்கட்டை பின்னையது மோதகம் என்ற நிலைமை தான் ஏற்படும்.

இவ்வாறு வாத்தியார் கூற, ஆலடி அமைதியாயிற்று.

அமைதியைக் குலைக்க சிறாப்பர் கனகசபை குரல் கொடுத்தார்.

**சிறாப்பர்:-** நாட்டில இன, மத நல்லிணக்கத்தை ஏற்படுத்துவோம் என அரசாங்கம் கூறுகிறது. ஆனால் என்னைப் பொறுத்தவரை மத நல்லிணக்கம் ஏற்பட வேண்டுமாயின் முதலில மதமாற்றத் தடைச் சட்டம் கொண்டு வரப்பட வேணும். அப்பத்தான் மத நல்லிணக்கம் ஏற்படும்.

**சாத்திரியார்:-** என்ன சிறாப்பர் சொல்லுறியள்.

**சிறாப்பர்:-** சாத்திரியார், தெல்லிப்பழை வீமன்காமத்தில உள்ள ஒரு வைரவர் ஆலயத்தில திருவிழா. அந்த திருவிழாவுக்கு அனுமதி எடுத்து ஒலி பெருக்கி பயன்படுத்தப்பட்டு வருகுது.

இருந்தும் அங்க இருக்கிற ஒரு மத மாற்றக் குடும்பம் குறித்த ஒலி பெருக்கியை நிறுத்த வேணும் எண்டு பொலிஸ் நிலையத்திற்கு தகவல் கொடுத்த வண்ணம் இருக்குதாம்.

இதால பொலிஸாரும் அந்த வைரவர் கோவிலுக்கு அடிக்கடி போய் அப்படிச் செய்யுங்க, இப்படிச் செய்யுங்க எண்டு ஒரே தொந்தரவு.

இதன் காரணமாக வழிபாட்டை நிம்மதியாக நடத்த முடியாமல் அந்த மக்கள் வேதனை அடைந்திருக்கினம்.

**பண்டிதர்:-** நீங்கள் இதைச் சொல்லுறியள். இந்தியாவில இருந்து சுற்றுலா என்ற அடிப்படையில விசா எடுத்து பலாலி ஊடாக யாழ்ப்பாணம் வருகிற இரண்டு மத போதகர்கள் இங்க மதமாற்றக் கூட்டம் வைக்கிறதுக்கு ஏற்பாடு செய்திருக்கினம் எண்டால் பாருங்களன்.

**மூப்பர்:-** எங்கட நாட்டில எவ்வளவோ பிரச்சினைகள் இருக்குது. இந்தநேரத்தில மத மாற்ற சபைகள் ஊடுருவி, மக்களின் ஏழ்மையை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி மதம்மாற்றும் மாபாதகத்தைச் செய்யினம்.

**விதானையார்:-** மூப்பர் இதுகளுக்கெல்லாம் கவலைப் படக் கூடாது. எங்கெல்லாம் மத மத மாற்றிகள் வருகிறார்களோ அவர்களை ஓட ஓடத் துரத்த வேணும்.

இத்தகையவர்கள் கத்தோலிக்க மக்களுக்கும் எதிராகச் செயற்படுகினம்.

இவர்களின் நோக்கம் ஆபத்தானது.

இவ்வாறு விதானையார் கூற, அந்நேரம் பார்த்து ஆலடிப்பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.



## யாழ். நுண்கலைப்பீட கன்ரீனில் மீன் சாப்பாடு விற்கப்படுகுதாம்


ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமெரிக்கா உக்ரைனை அதட்டத் தொடங்கி விட்டதே?



நாயைத் தூக்கில் போட்டாச்சு, குரங் கையும் தூக்கில் போட்டாச்சு இனி யாரைத் தூக்கில் போடப் போகிறார்கள் வியாசரே?

**சலரோகம் இளவயதினரிடம் அதிகரித்து விட்டதை காண முடிகிறதே வியாசரே?**

சுபேதன்-வடமராட்சி

கோதாரியில போனதுகள் கொத்து ரொட்டியையும் கொக்கக்கோலாவையும் மூன்று வேளையும் எடுத்தால் சலரோகம் வராமல் சற்குருஜியோ வருவார்?

றோட்டாலை போற கீரியை படலைக்குள்ளால விட்ட கதையா சாராயத்தைக் குடிச்சு சுகரை எல்லோ விலைக்கு வேண்டுதுகள் எங்கட இளசுகள்.

**அதிகம் விதைப்பவன் அதிகம் அறுப்பான். இது தொடர்பில் வியாசரின் கருத்தென்ன?**

ஜெயக்குமார்-முகமாலை

நாம் விதைப்பது நல்லதோ, தீயதோ அதன் இரண்டு மடங்கை அறுவடை செய்தே தீருவோம்.

இந்த மகா தத்துவத்தை உணராத பலர் இன்றும் அடுத்தவர்களைப் பற்றி அவதூறு பரப்பிக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

உன்னில்தான் தவறு என்று ஒருவருக்கு சுட்டுவிரலை நீட்டினால் மிகுதி நான்கு விரலும் எம்மையே சுட்டி நிற்கும் என்பதை மறந்து விடுகிறான் பாவப்பட்ட மனிதன்

**நாயைத் தூக்கில் போட்டாச்சு, குரங்கையும் தூக்கில் போட்டாச்சு இனி யாரைத் தூக்கில் போடப் போகிறார்கள் வியாசரே?**

சுந்தரம்-துன்னாலை

இலங்கையில் மனித தூக்குத் தண்டனையை நிறுத்தியதன் விளைவுதானோ இது என்ற எண்ணம் மக்களிடம் எழாமல் இல்லை.

**நாடு மீட்சி பெற வழி ஏதும் இல்லை போல தெரிகிறதே வியாசரே?**

தவிந்து-பூந்தோட்டம்

பானையில் இருந்தால் தானே அகப்பையில் வரும். இங்கு தான் பானையில் ஏதும் இல்லையே!

காலம் காலமாக வந்த அரசியல் தலைவர்கள் வழித்து துடைத்து விட்டு வெறும் பானையையும் அகப்பையையுமல்லவா விட்டுச் சென்றிருக்கிறார்கள்.

இனி அதில் அரிசி இட வேண்டும். நீர் ஊற்ற வேண்டும். உப்புப் போட வேண்டும். தீ மூட்ட வேண்டும். அதன் பின் அரிசி வேக வேண்டும். அது வேகி சூடு ஆறிய பின்னரே பரிமாற முடியும்.

இதற்கு இன்னும் நூறு வருடமாவது தேவையல்லவா?

**முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே வன்னிப் பெருநிலப்பரப்பில் போர்க்குற்ற மீறல் நடந்ததாகக் கூறியிருக்கிறாரே?**

சுதன்-குப்பிழான்

தமிழினத்துக்குத் தோல்வி காணுவதும் துவண்டு போவதும் புதிதில்லையே.

இலங்கைக்கு 1948 ஆம் ஆண்டு சுதந்திரம் கிடைத்ததாய்ப் பேசிக் கொள்கிறார்கள்.

ஆனால் இன்று வரை சுதந்திரம் மறுக்கப்பட்ட இனமாக தமிழினம் வாழ்ந்து கொண்டே தான் இருக்கிறது.

இதைச் சர்வதேசம்கூடக் கண்டு கொள்ளவில்லை என்பதுதான் வேதனை.

சர்வதேசத்திற்கு இலங்கையின் வளத்தை எடுப்பதற்கு ஒரு வழி தேவை. அந்த வழியாக போர்க்குற்ற மீறலை பாவிக்கிறது அவ்வளவு தான்.

**அமெரிக்கா உக்ரைனை அதட்டத் தொடங்கி விட்டதே?**

மதுசுதன்-மாலிகாவத்தை

ஒரு நாட்டின் நிலைப்பாடு ஆட்சிப்பீடத்தில் இருக்கும் தலைவனைப் பொறுத்ததே என்பதற்கு அமெரிக்கா நல்ல உதாரணம்.

ஆம், கடந்த ஆண்டு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன்; உக்ரைனை ஆதரித்து ரஷ்யாவை எதிர்த்தார்.

அடுத்து வந்த ட்ரம்ப் உக்ரைனை எதிர்த்து ரஷ்யாவை ஆதரிக்கிறார்.

இதில் என்ன வேடிக்கை என்றால் உலக நாடுகள் பல அமெரிக்காவுக்கு எதிராக ஒன்று சேர்ந்து நிற்பது தான்.




**பிறக்கும் போதும்-இறக்கும் போதும் அழும் மனிதன் இடையில் சிரிக்கிறானே?**

அரசு-நவாலி

வாழ்க்கை மிகக் குறுகியது. அந்த குறுகிய வாழ்வில் அடுத்தவர்களைக் கஷ்டப்படுத்தாமல் வாழ்ந்திட வேண்டும் என்பதை அறியவே, மனிதனை பிறக்கும் போதும் இறக்கும் போதும் அழவைத்தான் இறைவன்.

ஆனால் ஆறறிவு மனிதனோ குறுகிய வாழ்வை மேலும் மேலும் குறுக்கி அதில் தனக்கென்றொரு வட்டம் போட்டு வாழ்வதாய் நினைத்து மாண்டு போகிறான்.

**சிலர் அதிகமாகப் பேசி தங்கள் தரத்தைக் குறைத்துக் கொள்கின்றனரே?**

இந்து-மானிப்பாய்

ஜூனியர் விகடனில் எழுதப்படும் கழுகார் பதில்கள் பகுதியில் சீமான் தொடர்பில் கேட்கப்பட்ட கேள்விக்கு இவ்வாறு பதில் வழங்கப் பட்டது.

சொற்கள் விதைகளைப் போன்றன. நாம் மறந்து விட்ட பின்பும் அவை நமக்குத் தெரியாமல் வளர்ந்து நிற்கும். நல்லவை நல்லவையாக கெட்டவை கெட்டவையாக.

அந்தவகையில் சீமான் சமீபத்தில் பொறுப்பற்ற விதத்தில் பேசி வருகிறார். பொதுவெளியில் அவர் பேசும் முறையை மாற்றிக் கொள்ள வேண்டும். அதுவே அவரது எதிர்கால அரசியலிற்கு நல்லது.

**அடுத்தவரின் வாழ்வைப் பற்றி நாம் அதிகம் அலட்டிக் கொள்ளத் தேவையில்லையே வியாசரே?**

தருஷ்-வதிரி

உண்மை தான். ஆனால் எம்மிடம்தான் அந்த நல்ல பழக்கம் இல்லையே. வாழ்ந்தாலென்ன, கெட்டாலென்ன, அடுத்த வீட்டுக் காரரைப் பார்த்து செய்வது, செயற்படுவது எமக்கு பழகி விட்டது.

இந்தக் கொடும் செயலை பிள்ளைகளின் படிப்பிலும் பிரயோகிப்பது தான் கொடுமையானது.

பிள்ளையின் விருப்பம் என்னவென்று கேட்காமல் அடுத்த வீட்டுப் பிள்ளை என்ன படிக்கிறதோ அதைத்தான் நீயும் படிக்க வேண்டும் என்று திணித்து, பிள்ளைகளை கல்வி நிலையத்தில் விட்டுவிட்டு வீதிகளில் கால்கடுக்க நிற்கிறோமே.

**காதல் தோல்வி தற்கொலைகள் குறைந்து விட்டனவே வியாசரே?**

செல்வராஜ்-யாழ்ப்பாணம்

காதலில் இரண்டு வகை. ஒன்று காதல் போயின் சாதல். மற்றையது காதல் போயின் இன்னொரு காதல்.

இதில் முன்னையது முந்தின காதல் பின்னையது தற்காலக் காதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத கானங்கள்

படம்: படகோட்டி
பாடியவர்: டி.எம்.சௌந்தரராஜன்
இயற்றியவர்: வாலி
இசை: விஸ்வநாதன் ராமமூர்த்தி

உலகத்தின் தூக்கம் கலையாதோ
உள்ளத்தின் ஏக்கம் தொலையாதோ
உழைப்பவர் வாழ்க்கை மலராதோ
ஒரு நாள் பொழுதும் புலராதோ

தரை மேல் பிறக்க வைத்தான் –
எங்களைத்தண்ணீரில் பிழைக்க வைத்தான்
கரை மேல் இருக்க வைத்தான் –
பெண்களைக்கண்ணீரில் குளிக்க வைத்தான்

தரை மேல் பிறக்க வைத்தான் –
எங்களைத்தண்ணீரில் பிழைக்க வைத்தான்....

தரை மேல் பிறக்க வைத்தான்...

கட்டிய மனைவி தொட்டில் பிள்ளை
உறவைக் கொடுத்தவர் அங்கே
அலை கடல் மேலே அலையாய் அலைந்து
உயிரைக் கொடுப்பவர் இங்கே
வெள்ளி நிலாவே விளக்காய் எரியும்
கடல்தான் எங்கள் வீடு
வெள்ளி நிலாவே விளக்காய் எரியும்
கடல்தான் எங்கள் வீடு
முடிந்தால் முடியும் தொடர்ந்தால் தொடரும்
இதுதான் எங்கள் வாழ்க்கை
இதுதான் எங்கள் வாழ்க்கை

தரை மேல் பிறக்க வைத்தான் –
எங்களைத்தண்ணீரில் பிழைக்க வைத்தான்....

கடல் நீர் நடுவே பயணம் போனால்
குடிநீர் தருபவர் யாரோ
தனியாய் வந்தோர் துணிவைத் தவிர
துணையாய் வருபவர் யாரோ
ஒருநாள் போவார் ஒருநாள் வருவார்
ஒவ்வொரு நாளும் துயரம்
ஒருநாள் போவார் ஒருநாள் வருவார்
ஒவ்வொரு நாளும் துயரம்
ஒரு ஜாண் வயிற்றை வளர்ப்பவர் உயிரை
ஊரார் நினைப்பது சுலபம்
ஊரார் நினைப்பது சுலபம்

தரை மேல் பிறக்க வைத்தான் –
எங்களைத்தண்ணீரில் பிழைக்க வைத்தான்...

## அன்பு வாசகர்களே!

காலத்தால் அழியாத கானம் பகுதியில்
உங்களுக்குப் பிடித்த பழைய பாடல்களை
பெயர், முகவரியுடன் வாட்சப் செய்தால்
உங்கள் விருப்பப்பாடல் உங்கள் பெயருடன்
வெளிவரும்.

076 097 3126

# காலத்தின் நாயகன் ஸ்மித்

**சிட்னி விமான நிலையம்**
**அவுஸ்திரேலியா : 2018**

விமான நிலையம் வழக்கத்திற்கு மாறாக மிகவும் பரபரப்பாகக் காட்சியளிக்கிறது. கமராக்களின் ப்ளாஷ் வெளிச்சம் கண்களைக் கூசச் செய்யும் அளவுக்கு மின்னிக் கொண்டிருந்தது. அந்த ப்ளாஷ் வெளிச்சம் அந்த வீரனுக்கு அவனுள் இருந்த குற்றவுணர்ச்சியின் மீது வெளிச்சம்பாய்ச்சியது.

“நான் தவறு செய்துவிட்டேன். என்னை மன்னித்துவிடுங்கள். என் குடும்பத்திற்கும், நாட்டிற்கும் அவப்பெயரைத் தேடித் தந்து விட்டேன். காலம் என்னை மன்னிக்குமா எனத் தெரியவில்லை. இளம் தலைமுறையினருக்கு மிகமோசமான முன்னுதாரணமாக ஆகி விட்டேன் “என்று நா தழுதழுக்க பேசி விட்டுத் தேம்பித் தேம்பி அழுதான் அந்த வீரன்.

அவனின் அந்த அழுகை அன்று அவுஸ்திரேலிய கிரிக்கெட் ரசிகர்களின்மனதைக் கலங்கடித்தது. கிரிக்கெட் வரலாற்றிலேயே ஒரு வீரன் இப்படித் தான் செய்த தவறைப் பல கோடி மக்களுக்கு முன் ஒப்புக்கொண்டு கண்ணீர் விட்டு பகிரங்கமாக மன்னிப்புக் கேட்ட சம்பவம் நடந்ததில்லை. அப்படி பகிரங்கமாக மன்னிப்புக் கேட்ட அந்த கிரிக்கெட் வீரனை வரலாறு என்றுமே மறக்காது. அந்த வரலாற்று வீரன் ஸ்டீவ் ஸ்மித் கிரிக்கெட்டின் டாப் பட்டர்களில் ஒருவராகத் திகழ்ந்து தன் அணிக்குத் தன் பங்களிப்பைச் செலுத்தி விடைபெற்றிருக்கிறார். 2018 ஆம் ஆண்டு 4 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுவதற்காக ஸ்மித் தலைமையி லான அவுஸ்திரேலிய அணி தென்னா பிரிக்காவிற்கு சுற்றுப்பயணம் மேற் கொண்டிருந்தது.

1-1 கணக்கில் இரு அணிகளும் சமமாக இருந்தன. ஆனால் மூன்றாவது ஆட்டத்தை அவுஸ்திரேலிய அணி சரியாக விளையாடவில்லை. தோல்வியை நோக்கி அவுஸ்திரேலிய அணி சென்றுகொண்டிருந்தது. சூழல் இப்படி இருக்க ஆட்டத்தின் மூன்றாவது நாளில் அவுஸ்திரேலிய பட்டர் கேமரூன் பான்கிராஃப்ட் விரல் இடுக்குகளில் மஞ்சள் நிறத்தில் எதையோ வைத்துக்கொண்டு பந்தை தேய்த்துக்கொண்டே இருக்கிறார். (கிரிக்கெட் பந்து பழையதாக பழையதாக பௌலர்கள் ரிவர்ஸ்விங் செய்ய ஏதுவாக மாறும்.) சந்தேகத்துக்கிடமான அந்தச் செயலை அத்தனை கமராக்களும் வெளிச்சம் போட்டுக்காட்டின. அன்றைய நாள் ஸ்மித்தின் தலையில் இடி விழுந்தது. போட்டி முடிந்த பிறகு அவுஸ்திரேலியாவிற்கு சென்ற ஸ்மித்தை குற்றவாளியை அழைத்துச் செல்வதுபோல் பாதுகாப்புப் படையினர் அழைத்துச் சென்றனர். இந்தச் சம்பவத்தால் பல விமர்சனக் கத்திகளை அவர் எதிர் கொண்டார். அதனால் குத்திக் கிழிக்கப் பட்டார்.


இதனால் அடைந்த மன உளைச்சல் நீங்குவதற்கு முன்பாகவே அவுஸ்திரேலிய கிரிக்கெட் வாரியம் மிகப்பெரிய தண்டனையைக் கொடுத்தது. கப்டனாக இருந்த ஸ்மித்திற் கும், துணை கப்டனாக இருந்த டேவிட் வார்னருக்கும் அனைத்துவிதமான கிரிக்கெட்டுகளிலும் விளையாடுவதற்கான ஓராண்டு காலத்தடை விதிக்கப்பட்டது. தடையை எதிர்கொண்ட ஸ்மித் ஓர் ஆண்டு கால இடைவெளிக்குப் பிறகு 2019 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவுக்கும் இங்கிலாந்துக்கும் இடையே நடைபெற்ற ஆஷஸ் தொடரில் களம் இறங்கினார். தவறை உணர்ந்து அதற்கான தண்டனையை அனுபவித்து மீண்டுவந்து. தற்போது தன்னை மீண்டும் நிரூபிக்க வேண்டிய கட்டாயத்தில் இருந்தார்.

ஆஷஸ் தொடரில் இங்கிலாந்தின் பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் அவுஸ்திரேலியா திணறியபோது. “எதிர்பாராததை ஏதிர் பாருங்கள் என்று தனி ஆளாக இறங்கி நான்கு போட்டிகளில் 774 ரன்களைக் குவித்து எதிரணியைக் கதிகலங்கச் செய்தார். ஸ்மித்தின் பங்களிப்பால் ஆஷஸ் தொடரை அவுஸ்திரேலிய அணி கைப்பற்றியது. அந்தத் தொடரில் தொடர் நாயகன் விருதை வென்ற ஸ்மித்தை ரசிகர்கள் கொண்டாடத் தொடங்கினர்.

**-டுபாய் இன்டர்நேஷனல் கிரிக்கெட் ஸ்டேடியம் : 2025**

மீண்டும் அதே ப்ளாஷ் வெளிச்சம் ஸ்மித்தை சூழ்ந்தது. அவர் முன் பத்திரிகையாளர்களின் மைக்குகள் குவிந்திருந்தன. இப்போது அதே வீரன் தன் அணியைத் தலைமை தாங்கி தோல்வியைத் தழுவியிருந்தது. ஆனாலும் அந்த வீரனின் முகத்தில் இப்போது எந்தவித குற்றவுணர்ச்சியும் இல்லை.“இது ஒரு சிறந்த பயணம். இந்த பயணத்தில் ஒவ்வொரு நிமிடத்தையும் நான் ரசித்தேன். இந்தப் பயணத்தில் பல அற்புதமான தருணங்களும், நினைவுகளும் இருக்கின்றன என்று தனது ஓய்வு முடிவை நெகிழ்வாக அறிவித்தார்.

எல்லா வீரர்களும் திறமையாளர்களும் நாயகர்களாக ஆவதில்லை. காலம் சிலரை மட்டுமே நாயகன் ஆக்குகிறது. தன் தவறை உணர்ந்து மன்னிப்பு கோரி, தண்டனை அனுபவித்து, மீண்டும் தன் நாட்டின் வெற்றிக்காக திறமையையும் நேர்மையையும் மட்டுமே நம்புகிறவனாக வந்த ஸ்மித் காலத்தின் நாயகனாக நிற்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலவை அடைந்து வரலாறு படைத்த ப்ளூ கோஸ்ட்

நிலவு குறித்த ஆய்வுகள் கடந்த சில ஆண்டுகளாகவே மீண்டும் தீவிரமாக நடந்து வருகிறது. இதற்கிடையே அமெரிக்காவின் தனியார் நிறுவனமான ஃபயர்ஃபிளை ஏரோஸ்போஸ் என்ற நிறுவனம் அனுப்பிய ப்ளூ கோஸ்ட் லேண்டர் இப்போது வெற்றிகரமாக நிலவில் தரையிறங்கியுள்ளது..

விண்வெளி குறித்த ஆய்வுகள் என்பது கடந்த நூற்றாண்டு முதலே நடைபெற்று வருகிறது. கடந்த நூற்றாண்டில் அமெரிக்காவுக்கும் சோவியத் ஒன்றியத்திற்கும் இடையே விண்வெளி ஆய்வில் போட்டி இருந்தது.

அதை நிலவுக்கு மனிதர்களை அனுப்பியதன் மூலம் அமெரிக்கா முடித்து வைத்தது. அதன் பிறகு நிலவு குறித்து ஆய்வுகள் பெரியளவில் நடைபெறாமல் இருந்தது.

அமெரிக்கா நிலவுக்கு மீண்டும் மனிதர்களை அனுப்பும் திட்டத்தைக் கையில் எடுத்துள்ளது.

ஆனால், கடந்த நூற்றாண்டில் நடந்த விண்வெளி ஆய்வுக்கும் இந்த நூற்றாண்டில் நடக்கும் விண்வெளி ஆய்வுக்கும் அதிக வித்தியாசம் இருக்கிறது. அதாவது கடந்த நூற்றாண்டில் அரசு மட்டுமே முழுக்க முழுக்க விண்வெளி ஆய்வுகளைச் செய்து வந்த நிலையில், இந்த முறை தனியார் பங்களிப்பு கணிசமாக அதிகரித்துள்ளது. அமெரிக்காவில் ஸ்பேஸ்எக்ஸ், ப்ளூ ஆர்ஜின், போயிங் எனப் பல தனியார் நிறுவனங்கள் விண்வெளி ஆய்வில் தீவிரம் காட்டி வருகிறது.

இதற்கிடையே அமெரிக்க தனியார் நிறுவனம் அனுப்பிய சாட்டிலைட் முதல் முறையாக வெற்றிகரமாக நிலவில் தரையிறங்கியுள்ளது. ஃபயர்ஃபிளை ஏரோஸ்பேஸ் என்ற இந்தத் தனியார் நிறுவனத்தின் ப்ளூ கோஸ்ட் லேண்டர் வெற்றிகரமாக நிலவில் தரையிறங்கியது. நிலவில் நேராகத் தரையிறங்கியுள்ளது. முதல் தனியார் நிறுவனத்தின் லேண்டர் ப்ளூ கோஸ்ட் ஆகும்.



கடந்த பெப்ரவரி மாதமே தனியார் லேண்டர் ஒன்று நிலவில் தரையிறங்கியிருந்தது. ஆனால், அது பக்கவாட்டிலேயே தரையிறங்கியிருந்தது. நேராகத் தரையிறங்கிய முதல் லேண்டர் ப்ளூ கோஸ்ட் ஆகும்.

இந்த சாட்டிலைட்டில் மொத்தம் 10 அறிவியல் மற்றும் தொழில்நுட்ப சாதனங்கள் இருக்கிறது. இது நிலவின் **Mare Crisium** என்ற இடத்தில் தரையிறங்கியதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். நிலவில் தரையிறங்கி சிறிது நேரத்தில், அது மேற்பரப்பில் இருந்து போட்டோ எடுத்து அனுப்பியுள்ளது.

இந்த ப்ளூ கோஸ்ட் லேண்டர் கடந்த ஜனவரி 15ஆம் திகதி ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் ரொக்கெட் மூலம் நிலவுக்கு அனுப்பப்பட்டது. இது இப்போது சுமார் 45 நாட்கள் பயணித்து நிலவை அடைந்துள்ளது. இது ஒரு சந்திர நாள் (சந்திரயான் 3ஐ போலவே) - அதாவது பூமியில் 14 நாட்களுக்கு இணையான காலம் நிலவில் தங்கி ஆய்வுப் பணிகளை மேற்கொள்ள உள்ளது.

தனியார் நிறுவனத்தின் லேண்டர் வெற்றிகரமாக நிலவில் தரையிறங்கியுள்ளது ஒரு மகத்தான சாதனையாகவே பார்க்கப்படுகிறது. இதுவரை இந்தியா, அமெரிக்கா, சோவியத் ஒன்றியம், ஜப்பான் மற்றும் சீனாவின் லேண்டர்கள் மட்டுமே விண்வெளியில் வெற்றிகரமாகத் தரையிறங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.



# ஆச்சி அறிவுரை

## பெற்றோரின் கடமை எது?

"பள்ளிக்கூடங்களில விளையாட்டுப்போட்டி தொடங்கிட்டுது. வெயில் கடுமையாக இருக்கிறத்தால அவதானம் தேவை. தண்ணீரை அடிக்கடி எடுத்துக்கொள்ள வேணும்.

தொடர்ச்சியாக வெயிலுக்குள்ள பிள்ளைகள் நிக்கிறதை தவிர்க்க வேணும். இதில அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள் அதிக கவனம் எடுக்கவேணும்.

ஓம், பெற்றார் பிள்ளைகள் தொடர்பில இன்னும் அதிகம் கவனம் எடுக்கவேணும். கடந்த செவ்வாய்க்கிழமை மாங்குளம், கற்குவாரிப் பகுதியில ஒன்றரை வயது குழந்தை ஒண்டு பாட்டியின்ர மருந்துகளை குடிச்சத்தில இறந்து போயிட்டுது எண்ட செய்தியைப் பார்க்க மனம் பதை பதைச்சுப் போய்ச்சு.

சின்னப் பிள்ளைகள் இருக்கிற வீடுகளில அவதானம் தேவை. முதலில வீடு சுத்தமாக இருக்கவேணும். பிள்ளைகள் படுக்கிற இடம் நல்ல வெளிச்சம் உள்ள, காற்றோட்டமான இடமா இருக்கவேணும். அதோட பூச்சி - பூரான் ஏதும் அண்டாத இடமாவும் இருக்கவேணும்.

முந்தின காலங்களிலை நவீன வசதி எதுவும் இல்லை. இப்ப மாதிரி கல் வீடுகளும் இல்லை. எல்லாம் மண் வீடுகள்தான்.

ஓலை வீடு எண்டாலும் அது சுத்தம், சுகாதாரம், பாதுகாப்பு நிறைஞ்ச வீடாத்தான் இருக்கும்.

நிலம் சாணம் போட்டு மெழுகி இருக்கும். சாணம் காய்ஞ்சு பொருக்குக் கிழம்பும் அதை சின்னஞ்சிறிசுகள் எடுத்து வாய்குள்ள வைச்சிடும்.

அது ஒண்டுதான் அந்த வீடுகளில சின்னப் பிள்ளையளுக்கு இருக்கிற பயம்.

பேராண்டி, கொப்பா சின்னப் பிள்ளையா இருக்கேக்க, தவண்டு போய் வீட்டு மூலையில இருந்த சாணப் பொருக்கை உடைச்சு வாய்க்குள்ள வைச்சிட்டான்.

மூண்டு நாளா வயித்தால அடி. அதுக்குப்பிறகு நான் சரியான அவதானம்.

சின்னப் பிள்ளைகள் பெரியாக்கள் செய்யிறதை அவதானிச்சு தாங்களும் அதே போல செய்யுங்கள்.

சில பிள்ளைகள் கோபக்காரப் பிள்ளைகளாகவும் வன்முறை மனநிலையோடயும் கெட்டவார்த்தை பேசுற பிள்ளைகளாகவும் இருப்பினம்.

பிள்ளைகளின்ர சூழல் எதுவோ, அதுவே பிள்ளைகளில பிரதிபலிக்கும்.

மாங்குளம் பகுதியிலை நடந்த சம்பவம் தொடர்பில் பெற்றோர்கள் அவதானம் இல்லாமல் செயற்பட்டதே அந்தப் பிஞ்சு இறக்கக் காரணம்.

சின்னப் பிள்ளைகள் எடுக்கிற எல்லாத்தையும் வாய்க்குள்ள வைச்சிடுங்கள். அதால ஆபத்தான பொருட்களை அதுகளின்ர கைக்கு எட்டாத மாதிரி வைக்கவேணும்.

பாட்டி தன்ர மருந்தை எடுத்துக் குடிக்கிறதை குழந்தை அடிக்கடி கவனிச்சிருக்குது. அதுன்ர கையில அந்த மருந்துகள் கிடைச்சதும் பாட்டி குடிக்கிற மாதிரி மருந்தைக் குடிச்சிட்டுது போல.

இது எவ்வளவு கொடுமையான நிகழ்வு. அந்த நேரம் யாராவது ஒராளின்ர கண்ணில அம்பிட்டிருந்தாலும் கூட, அந்தப் பச்சை மண் இண்டைக்கு உயிரோட இருந்திருக்கும்.

கடவுளே! இதுகளை விதி எண்டுறதா! கவனயீனம் எண்டுறதா! எது எண்டு புரியயேல்லை.

எங்கட கவனயீனத்தால ஒரு பச்சை மண்ணின்ர உயிர் பறிபோயிட்டுது. இதுகளக் கேள்விப்பட நெஞ்சம் நொருங்கிப் போய்விட்டது.



வாழவேண்டிய பிள்ளை எங்கட அக்கறையீனத்தால இப்படி அற்பாயிசில போயிட்டுது. இனி இப்படிக் கொடுமைகள் நடக்கக்கூடாது. நடக்காமல் பார்த்துக் கொள்ள வேணும். இதில பெற்றோர்கள் நாங்கள் அவதானமா இருந்தால் சரி. இறந்த அன்ரனி சஞ்யித் இன்ர ஆத்மா சாந்தி அடைய கடவுளிட்ட வேண்டுவம்.

**ஆச்சி வருவா...**


மாவை.நா.கஜேந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "வெள்ளை ஈ" யே வெளியேறு!

தாளுண்ட நீரைத் தலையாலே தான்தரும்
சிறப்புடைய தென்னைக்கு "வெள்ளை ஈ" த் தாக்கம்!
நாளும்மெம் வாழ்வினில் நலம்சேர்க்கும் தென்னையினை
"வெள்ளை ஈ" அழித்திடும் செயலினை என்னசெய்வோம்?
வாழுகின்ற காலமதை வருடங்கள் நூறுக்கும் மேலாக
வாய்த்திடும் பயிருக்கு ஏனிந்தப் பேரழிவு?
சூழுகின்ற துயர்போக்க விரைவான நடவடிக்கை
எடுப்பதற்கு ஏனின்னும் தயக்கம் இங்கே?

தேங்காய் விலையின்று உச்சம் தொடுகிறது!
தெய்வீக நிகழ்வுகளும் தாக்கம் பெறுகின்றன!
தேங்காயால் வாழ்வியலும் மாற்றம் பெறுகிறது!
தெங்கின் உற்பத்தியும் வீழ்ச்சி அடைகிறது!
பாங்கான சமையலிலே சுவையும் குறைகிறது!
பார்வையைச் செலுத்திடுவீர் "ஈ"யினை ஒழித்திடவே!
ஏங்கும் இதயங்களின் ஏக்கம் தீர்த்திடுவீர்!
ஏற்ற நலம் சேர்க்கக் களத்தில் குதித்திடுவீர்!



**நாயன்மார்கட்டு ப. மகேந்திரதாசன்**



# நீதியும் நியதியும்

இன்று வரைக்கும்
நின்று நிலைக்கும்
ஒற்றுமையின்மையை
ஏற்றுக் கொள்ளாமல்
சீர்திருத்த மென்னும்
கூர்ப்புத்தியுடன் விரைந்து
புறப்பட்டவரைக் கண்டு
ஒன்றுகூடிய பலரும்
கள்ளன் கள்ளனென்று
மெல்ல வழக்கில் மாட்டி
மனச் சாட்சியை மறந்து
சாட்சி சொன்னார்
கொலை காரனென்று
இல்லை ஐயா! இதுவும்
வேற்றுமை மத்தியிலும்
ஒற்றுமையாகக் காணும்
இன்றியமையாத புதிய
பொறி முறை யென்றும்
இது அடக்கு முறையை
விரைந்து தடுக்குமென்றும்
அடிப்படை உரிமைகளை
உறுதிப்படுத்துமென்றும்
ஆணித்தரமாய்க் கூற
நீதிக்குப் பொறுப்பானவர்
சிந்தனையில் மூழ்கினாலும்
கனியவில்லைக் காலமென்று
இன்றும் தவணைகளை
மென்று விழுங்கிப் போடுவதால்
தீர்வைத் தேடித் தேடி
வேதனைகள் தொடர்கின்றன.

**அரு. கனகராசா,**
**சாவகச்சேரி.**

# நெகிழி ஒழிக



எங்கும் நெகிழி
எதிலும் நெகிழி - நம்மில்
தொங்கும் நெகிழி
தொடரும் நெகிழி
வங்கம் கடந்து
வருகுது நெகிழி - நமக்கு
பங்கம் விளைவிக்க
இறங்குது நெகிழி
சுற்றிப்பார் உன்னை
சூழ்ந்தது நெகிழி
உற்றுப்பார் உன்னை
உரசுவது நெகிழி
எளிதில் மக்காத நெகிழி
மண்ணோடு சேராத நெகிழி
மண்ணை மலடாக்கும் நெகிழி
மனிதரை மாசுபடுத்தும் நெகிழி
வண்ண வண்ண நெகிழிகள்
வீதிதோறும் நெகிழிகள்
நீரைத் தாங்கும் நெகிழிகள்
நுளம்பைப் பெருக்கும் நெகிழிகள்
தவிர்ப்போம் தவிர்ப்போம்
நெகிழியைத் தவிர்ப்போம்
தடுப்போம் தடுப்போம்
நெகிழிப் பாவனையை தடுப்போம்.

**அரியூர் - ப.தர்மகுமாரன்**

# அடையாளங்கள்



அனிச்சையாய்த் தொலைந்துவிடுகின்றன
அடையாளங்கள்
நேற்று பார்த்தபோது தமிழ் ஐயாவிற்கு
என்ன சொல்லியும் என்னைப்
பிடிபடவில்லை
இழுத்துவைத்துக் கணக்கு வகுப்பு
எடுத்த மலர் அக்கா
இலவசமாய் பட்டாசு கொடுத்து
தொலைந்த தம்பியைத் தேடும்
எஸ்தர் அக்கா
எட்டு மணி நேரம் மூச்சுவிடாமல்
பேசிக்கொண்டே வந்த
சக ரயில் பயணி
முதல் வேலையில் முதுகில்
குத்துவதை அறிமுகப்படுத்திய
சக வேலையாள்
மனக் கிடங்கிற்குள் நுழைந்து
முகங்களை விடாமல் தேடினேன்
செல்லரித்துச் சிதைந்திருந்தன
இப்படி அடையாளமற்றுப் போகும்
உலகில்தான்
போராடிக்கொண்டே இருக்கிறோம்
யார் பெரியவர் என!

**ச.ஆனந்தகுமார்**

# புள்ளி அளவில் ஒரு பூச்சி



புத்தகமும் நானும்,
புலவன் எவனோதான்
செத்த பின்னும் ஏதேதோ சேதிகள் சொல்ல
மனம் ஒத்திருந்த வேளை!
ஒழுங்காக அச்சடித்த
வெள்ளைத் தாள் மீதில்,
வரியின் முடிவினிலே,
பிள்ளைத் தனமாய் பிசகாகப் போட்ட காற்
புள்ளியைக் கண்டு
புறங்கையால் தட்டினேன்.
நீ இறந்து விட்டாய்!
நெருக்கென்ற தென்நெஞ்சு
வாய் திறந்தாய், காணேன்,
வலியால் உலைவுற்றுத் "தாயே" என
அழுத சத்தமும் கேட்கவில்லை.
கூறிட்ட துண்டுக் கணத்துள் கொலையுண்டு
ஓர் கீறாகத் தேய்ந்து கிடந்தாய், அக்கீறுமே
ஓரங்குலம் கூட ஓடியிருக்கவில்லை.
காட் டெருமை காலடியிற்
பட்ட தளிர்போல, நீட்டு ரயிலில்
எறும்பு நெரிந்ததுபோல்,
பூட்டாநம் வீட்டிற் பொருள்போல
நீ மறைந்தாய். மீதியின்றி நின்னுடைய
மெய் பொய்யே ஆயிற்று
நீதியன்று நின்சா,
நினையாமல் நேர்ந்ததிது.
தீதை மறந்து விட மாட்டாயோ சிற்றுயிரே!
காதில் அப்பூச்சி கதை ஒன்றே வந்துவந்து
மோதிற்று மீண்டும் படிக்க முடியவில்லை
பாதியிலே புக்கத்தை மூடிப்படுத்துவிட்டேன்.

**மகாகவி உருத்திரமூர்த்தி**

# அன்பு வாசகர்களே!

உங்கள் அபிமான
சங்கு நாதத்தில் நீங்களும்
எழுதலாம்....

- அரசியல்
- இலக்கியம்
- கவிதை
- கட்டுரை

**ஆக்கங்களை உங்கள் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் என்பவற்றை குறிப்பிட்டு அனுப்பி வையுங்கள்.**

ஆசிரியர், வலம்புரி - சங்குநாதம்
இல.191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
E-mail : valampurii@yahoo.com
Whatsapp : 076 097 3126

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# களம் பல கண்ட யாழ் கோட்டை

செங்கை ஆழியான்

47

10 மார்ச் 1973 ஆம் திகதி சி தனபாலசிங்கம் (செட்டி), இன்ஸ்பெக்டர் பஸ்தியாம் பிள்ளையால் விசாரனைக் குட்படுத்தப்பட்டார். 23 மார்ச் 1973 ஆம் திகதி நா. அமர சிங்கம் ஏஎஸ்பி சில்வாவால் விசாரிக்கப்பட்டார் . 03. மே 1973 ஆம் திகதி ச. சபாலிங் கமும், 06 ஆம் திகதி பால கிருஸ்ணனும் பஸ்தியாம் பிள்ளையால் விசாரனைக் குட்படுத்தப்பட்டனர். இவர்கள் அனைவரிடமிருந்தும் தவறொத்துக் கொள்ளும் வகையில் தவறேற்பு வாக்கு மூலங்கள் பெறப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணக் கோட்டைச் சிறைச்சாலை வாயிலுக்கு, சிறையிலிருந்து விடுவிக் கப்படவிருந்த கிளிநொச்சி இளைஞர்களை வரவேற் பதற்காக தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த அமிர் தலிங்கம், திருமதி. அமிர் தலிங்கம், செல்லத்தம்பு, யோகேஸ்வரன் ஆகியோர் வேறு சில ஆதரவாளர்களு டன் வந்தனர். கோட்டை வாயிலிற் கடமைக்கிருந்த பொலிஸார் அவர்களை உள்ளே விடாது தடுத்தனர். "பொலிஸ் அத்தியட்சகரின் அனுமதியின்றி எவரும் கோட் டைக்குள் நுழைய முடி யாது" என அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது.

அமிர்தலிங்கம் குழுவினர் கோட்டை வாயிலிலிருந்து திரும்பி வரும்போது, கோட் டையின் வெளி வாயிலோடு இருந்த பொலிஸ் பெறக்சில் (சின்னக்கோட்டையில் இருந் தது) இருந்து காருக்குக் கற் கள் வீசப்பட்டன. அமிர் தலிங்கம் பொலிஸ் அத்தியட் சகரிடம் இக் கல்லெறிச் சம்ப வம் குறித்து முறைப்பாடு செய்வதற்காகப் பொலிஸ் நிலையத்திற்குள் ஏனையோ ருடன் நுழைந்தபோது, வெளியே காரினுள் திருமதி அமிர்தலிங்கம் அமர்ந்திருந் தார்.

பொலிஸ் நிலையத்தில் அமிர்தலிங்கத்தின் முறைப் பாட்டையோ வரவையோ பொலிஸ் அத்தியட்சகர் செனே விரத்ன கனம் பண்ணாது வேண்டா வெறுப்பாக நடந்து கொண்டார். றிசேன் பொலிஸ் செல்லத்துரையை அழைத்து, அமிர்தலிங்கத்தின் முறைப் பாட்டைப் பதியுமாறு கூறி விட்டு வெளியேறினார். அமிர் தலிங்கம் முறைப்பாடு செய்து கொண்டிருந்தபோது. பொலிஸ் பெறச்சிலிருந்தும், யாழ்ப்பாணம் ஸ்ரேடியத் திலிருந்தும் பொலிசார் வெளி வந்து, திருமதி அமிர்தலிங் கம் அமர்ந்திருந்த காரைச் சூழ்ந்து கொண்டனர் தூஷ்ணை வார்த்தைகளால் ஏசியதுடன் காரை உலுப்பி னர்.

கலவரத்தை அறிந்து அமிர்தலிங்கம் வெளியில் விரைந்து வந்தபோது, அவர் களில் ஒருவனான ரணசிங்க காரின் முன் கண்ணாடியை அறைந்து நொறுக்கியது டன் அமர்தலிங்கததையும் ஓங்கி அறைந்தான்.

இக் கலவரத்தைக் கண் ணுற்ற ஏஎஸ்பி ஒருவர் விரைந்து காரடிக்கு ஓடிவந்த தால், மேற் கொண்டு அசம் பாவிதங்கள் நேராது தவிர்க் கப் பட்டது. (தொடரும்)

# கடல் புறா

142

"இரண்டு மரக்கலங்களும் கடா ரத்துக்கும் சொர்ணத் தீவுக்கும் இடையேயுள்ள கடலில் இன்றி லிருந்து ஒரு மாதம் சஞ்சரிக்கட்டும்" என்று அந்த மரக்கலத்தின் தலை வர்களுக்குக் கூறினான்.

"எதற்காகச் சஞ்சரிக்க வேண் டும்?" என்று வினவினான் அந்தக் கொள்ளைக் கப்பல்களின் தலை வர்களில் ஒருவன்.

"உங்கள் மரக்கலங்களைவிடப் பலமான மரக்கலங்கள் அங்கு உலாவும்."

"எப்படித் தெரியும் உங்களுக்கு?" "சோதிடம் தெரியும் எனக்கு" என்று சொல்லி நகைத்த இளையபல்லவன் தனது மாலுமியை அருகில் அழை த்து அவன் தோள்மீது கையைப் போட்டுக் கொண்டு சற்றுத் தூரம் அவனை இழுத்துச் சென்றான்.

## ஊதல், ஊதல், ஊதல்
## ஊதினால் சாதல், சாதல், சாதல்

"காரணம் உனக்குத் தேவை யில்லை. சொல்கிறபடி செய். என் மாலுமி உங்களுக்கு வழி காட்டு வான்," என்றான் இளையபல்லவன். "ஒரு மாதம் சஞ்சரித்த பிறகு?" என்று வினவினான் இன்னொரு மரக்கலத்தலைவன்.

"இங்கு வந்துவிடலாம்" என்று இளையபல்லவன் கூறினான். "இடையே மரக்கலங்கள் ஏதாவது தென்பட்டால்?" மீண்டும் எழுந்தது கொள்ளைக்காரன் கேள்வி.

"முடிந்தால் தாக்கலாம்."
"ஏன் முடியாது?"

சோழர் படைத் தலைவனும் அகூதா வின் உபதலைவருமான இளைய பல்லவன் தன் தோள்மீது சரி சம மாகக் கையைப் போட்டுக் கொண் டதால் சங்கடமடைந்த மாலுமியை, "சங்கடப்படாதே சாதாரணமாக நடந்துவா" என்ற கடுமையான உத்தரவு அவனைப் பயத்துடன் நடக்க வைத்தது.

அப்படி நடந்து வந்த மாலுமி யிடம் "இரு மரக்கலங்களும் நான் கூறிய கடற்பகுதியில் சஞ்சரிக்கட்டும். அங்கு இன்னும் இருபது நாட்களுக்குள் சிவந்த கொடியுடன் ஒரு பெரும் மரக்கலம் வரும்"

(தொடரும்...)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல் 440

வலம்புரியின் மருத்துவச்சுடர்

(சென்ற வாரத் தொடர்ச்சி...)

அப்படிப்பட்ட என்னைப் பார்த்து "உங்கடை அலுவலை மட்டும் பார்த்துக்கொண்டு இருங்கோ. தேவையில்லாத விடயங்களில் தலை போட வேண்டாம்" என்று சொன்னானே. அது எப்படி முடியும்? எத்தனையோ விடயங்களையும் காரியங்களையும் செய்து பழகிப்போன இந்த மனிதன் வீட்டிற்குள்ளே முடங்கிப்போய் இருக்கிறானே என்ற அனுதாபங்கூட இல்லாமல்..!

என்னுடைய உலகம் இந்த வீடும் அதன் சுற்றுவட்டாரமுமாய் ஒடுங்கிப்போய் இருக்கும் போது அந்த அலுவல்களைப் பற்றி பேசாமல் எதைப்பற்றிப் பேசுவது? இவனுக்கு இப்போது அது விளங்க நியாயமில்லை. ஆனால் விளங்க ஒரு காலம் வரும். அப்போ அவனுடைய மகன் அவனுக்கு அதை விளங்கப்படுத்துவான்.

"கிழவனுக்கு வயது போனாலும் கடைசிக்காலம் மட்டும் கர்வம் கொஞ்சங்கூடக் குறையவே இல்லை." என யாரோ பேசுவது கேட்கிறது. உற்றுப் பார்க்கிறேன். முன் வீட்டுக் கந்தையர் வாய்நிறைய வெற்றிலையுடன் யாருடனோ பேசிக் கொண்டிருக்கிறார். முந்தநாள் இதே கந்தையர் என்னைச் சந்தித்து "உங்களைப் போல நல்ல மனிதர் ஊருக்கை யார் இருக்கினம்?" என்று கேட்டது என் ஞாபகத்துக்கு வருகிறது.

வயது போனால் கர்வமும் சேர்ந்தே போக வேண்டும் என்று யார் சொன்னது? கிழவன் என்றால் பிறர் சொல்லுக்குக் கட்டுப்பட்டு இருந்து சாக வேண்டியதுதான் என்று அவர்கள் நினைக்கிறார்களா?

அடுத்த வீட்டுச்செல்லையா என் மகனைத் தடவிக் கொடுத்து ஆறுதல் சொல்லிக்கொண்டிருக்கிறார். மகனும் பாவம்தான். ராத்திரியில் இருந்து சாப்பாடு தண்ணி இல்லாமல் இப்பொழுதும் அழுதுகொண்டே இருக்கிறான். நான் பேசியதை நினைத்துத்தான் அழுகிறானோ?

இல்லை இருக்காது. அவனுக்கு என்னை நன்றாகத் தெரியும். கோபம் வரும்போது நான் எல்லை மீறிப் பேசுபவன் என்பது அவனுக்குத் தெரியும். நான் இறந்து போனதை நினைத்துத்தான் அவன் அழுது கொண்டிருக்கிறான்.

மகனுக்கு ஆறுதல் சொல்லிக் கொண்டிருக்கும் செல்லையாவும் பாவம்தான். அவருக்கு ஐந்து பிள்ளைகள். இரண்டு வெளிநாட்டில், இரண்டு கொழும்பில். இங்கு இருக்கும் மகனுடனும் ஏதோ பிரச்சினையானபடியால் அவர் தனியத்தான் இருக்கிறார்.


என்னுடைய மகன் என்றால் என்னை இப்படித் தவிக்க விட்டிருப் பானா? எனக்குக் காய்ச்சல் வந்தால் அவனுக்கு நித்திரையே வராது. இப்படிப்பட்ட மகனைத்தான் நான் "எனக்குக் கொள்ளியும் வைக்கப்படாது" என்று பேசினேன். சீ நான் அப்படிச் சொல்லாமல் விட்டிருக்கலாம். வார்த்தைகளை விட முன் சிந்திக்க வேண்டும். விட்டால் பிடிக்க முடியாது என அப்பு அடிக்கடி சொல்லுவார். அது அவர்கள் அனுபவம்.

மகனுடன் இறுதியாகச் சில வார்த்தைகள் பேசவேண்டும் என்ற ஒரு துடிப்பு என்னுள் இருந்துகொண்டிருக்கிறது. நான் பேசத் துடிக்கும் அந்த வார்த்தைகள் அவனின் இதயத்திற்கு கேட்கும் என்று நம்பி பேசிப்பார்க்கிறேன்.

"தம்பி! உன்னிலே எனக்குக் கோபம் இல்லை. சொல்லிலே சொல்ல முடியாது, அன்பு மட்டும்தான் இருக்கிறது. நீ என்னுடையவன் என்ற உரிமையில் நான் எல்லை மீறிப் பேசியவை உண்மையில்லை. நீ ஓயாமல் உழைத்துக்கொண்டேதான் இருக்கிறாய். எனக்காகப் பலவற்றைச் செய்தவன் நீ. இன்னும் உன் குடும்பத்திற்காக, ஏன் இந்த ஊருக்காகவும் உழைத்துக்கொண்டுதான் இருக்கிறாய்.

இப்படி உன்னால் முடியுமாக இருக்கும் காலத்திலேயே உன்னைப் பற்றியும் கொஞ்சம் சிந்தித்துப்பார். பிற்காலத்தில் உன் பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொள். இது காலத்தின் ஒரு கட்டாயதேவை. பெரியவர்கள், மூத்தவர்கள் என்று ஏட்டிலும் எழுத்திலும்தான் முக்கியத்துவம் இருக்கிறது. நடைமுறையில் அந்தக் கௌரவம் அவர்களுக்குக் கிடைப்பதேயில்லை.

## கைமாறு



இவ்வளவு காலமாக எங்களுக்காகவே உழைத்துத் தேய்ந்துபோன ஒரு உயிர் என்ற உணர்வு இருப்பதேயில்லை. குழந்தைகளைப் போலவே முதியவர்களும் இலகுவில் நோய் வாய்ப்படும் தன்மை உடையவர்கள். ஆனால் குழந்தைகளுக்குக் கிடைப்பது போன்ற கவனிப்பும் பாதுகாப்பும் மருத்துவ வசதிகளும் முதியவர்களுக்குக் கிடைக்கிறதா? ஏன்? அவர்களைத் தேவையற்றவர்கள் என்று நினைக்கிறார்களா? உழைப்பை உறுஞ்சி எடுத்தபின் பிழிந்து எறியும் சக்கைகள் என்று நினைக்கிறார்களா?

உனக்குத் தெரியும் என நினைக்கிறேன். கடந்த எழுபத்து நான்காம் ஆண்டு உணவுக்குப் பெரிய பஞ்சம் வந்தது. அதில் இறந்து போனவர்களில் பெரும் பங்கினர் முதியவர்கள். இது எதைக் காட்டுகின்றது?

உன்னுடைய அந்திய காலத்தில் உனக்காகக் குரல் கொடுக்க, உன்னைப் பாதுகாக்க யாருமே இல்லாமல் போகலாம். நீ தான் உனக்குப் பாதுகாப்பு. இப்பொழுதே நீ உன்னைப்பற்றியும் கொஞ்சம் சிந்திக்க வேண்டும். நான் இப்படியெல்லாம் பேசிக்கொண்டுபோவது உன்னை மறைமுகமாகக் குற்றம் சுமத்துவதற்காக என்று நினைக்காதே. நீ உண்மையில் அப்படிப்பட்டவனும் அல்ல. உன் முதுமைக்காலத்திலும் எனக்கு அக்கறை இருக்கிறது என்பதுதான் அதன் உண்மை.

சந்ததிக்குச் சந்ததி மனிதன் மாறிக் கொண்டிருக்கிறான். இன்று நீ 'பிழை' என்று நம்பிக்கொண்டிருக்கும் ஒன்றை உன் அடுத்த சந்ததி 'புனிதம்' என்று சொல்லலாம். இந்தக் கொள்கை வேறுபாட்டை 'சந்ததி இடைவெளி' என்று சொல்லுவார்கள், உனக்குத் தெரிந்திருக்கும். இந்த இடைவெளியை சகித்துக் கொள்வது உன் கடைசிக்காலத்தில் கஷ்டமாக இருக்கும்.

அதுதான் பல பிரச்சினைகளுக்கு அடிநாதமாயும் இருக் கும். எனவே நீ இதை சகித்துக்கொள்ள இப்பொழுதில் இருந்தே அதற்கு உன்னைத் தயாராக்கிக்கொள். ஏனெனில் நீ தனி மனிதனாக நின்று அடுத்த சந்ததியைத் திருத்தமுடியாது."

நான் மீண்டும் மகனைப் பார்க்கிறேன். இப்பொழுதும் அவன் அழுது கொண்டே இருக்கிறான். நான் பேசியவை அவனது மனதிற்குக் கேட்டிருக்குமா? அன்று நான் பேசியவை என் நெஞ்சிலிருந்து வரவில்லை என்பதை அவன் விளங்கிக்கொண்டிருப்பானா? நான் வளர்த்த மகன் அவன். அவனுக்கு உலகம் தெரியும். இயற்கையின் நியதிகளும் புரியும். "எனக்கு நீ கொள்ளி வைக்கப்படாது" என்று நான் சொன்ன பின்பும் கொள்ளி வைக்க ஆயத்தமாகி நிற்கிறானே. அதிலிருந்து அவனுக்கு எல்லாம் தெரியும் என்றும் என்மீது அளவற்ற பாசம் உண்டென்றும் தெரிகிறது.

"தம்பி! எனது ஆவி இங்கிருந்து போகவேண்டிய நேரம் நெருங்கிக் கொண்டிருக்கின்றது. அதற்கு முன் சில விடயங்கள் கேட்பேன். செய்வாயா? முற்றத்தில் நிற்கும் மாமரத்தைத் தறிச்சுப்போடாதை. அந்த சிவத்த ஆட்டுக்குட்டியை இறைச்சிக்காரனுக்கு விற்றுப்போடாதை. எனது பூட்டப் பிள்ளைக்குக் கர்ணனின் கதை சொல்லிப் பாதியில் இருக்கிறது. அதை நீ முடித்து வைக்க வேண்டும்.

சந்தியில் நான் கட்டிக்குடுத்த பேருந்து நிழற்குடையைச் சீர் செய்து பராமரிக்க மறக்காதை. வருடந்தோறும் வரும் பாடசாலை பரிசளிப்பு விழாவிற்குரிய பரிசுகளை வாங்கிக் குடு. அது கனகாலமாச் செய்து கொண்டு வந்த விஷயம். கோயிலடிக் கிணறை இறைச்சுப் பராமரி. ஏனென்றால் அதிலை தான் ஊர் சனம் முழுக்கக் குடி தண்ணி எடுக்கிறவை. இதுகளைத் தான் நான் உனக்கு மிச்சமாக விட்டுச் செல்கிறேன். மகன் தந்தைக்காற்றும் நன்றி இதுவாகத்தான் இருக்கலாம். இதுதான் என் ஆன்மா சாந்தியடைய நீ எனக்குச் செய்யக் கூடிய கைமாறு.!

ம்.ம்.! காற்றால் மேலே எடுத்துச் செல்லப்படுவதாக உணர்கிறேன். மணி ஒலியைத் தொடர்ந்து கிரிகைகள் ஆரம்பிக்கின்றன. மகன் இன்னும் அழுது கொண்டுதான் இருக்கிறான். (முற்றும்)

**டாக்டர் சி.சிவன்சுதன்,**
**பொது வைத்திய நிபுணர்,**
**யாழ்ப்பாணம்.**

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (themilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தனங்கிளப்பு மற்றும் மறவன்புலோ நெற்செய்கையாளர்களுக்கான அறிவித்தல்

(சாவகச்சேரி)

தனங்கிளப்பு மற்றும் மறவன்புலோ பிரதேசங்களில் நெற் செய்கையில் ஈடுபடுகின்ற விவசாயிகள் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை 2025 ஆம் ஆண்டிற்கான ஏக்கர் வரி மற்றும் சந்தா பணம் ஆகியவற்றை சாவகச்சேரியில் செலுத்த முடியும் என கமக்கார அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

2025ஆம் ஆண்டிற்கான ஏக்கர் வரியை 31.03.2025 இற்கு முன்னர் செலுத்த வேண்டியிருப்பதனால் செவ்வாய்க் கிழமை காலை 8.30 தொடக்கம் 1.30 மணி வரை சாவகச்சேரி டச் வீதி செருக்கல் பிள்ளையார் ஆலயத்திற்கு அருகில் உள்ள பொதுநோக்கு மண்டபத்தில் ஏக்கர் வரி மற்றும் சந்தா பணத்தை செலுத்த முடியும் எனவும்-வருகை தரும் போது 2024ஆம் ஆண்டிற்கான ஏக்கர் வரிச் சிட்டையுடன் வருகை தருமாறு கேட்டுக் கொண்டுள்ளனர். (நி-8-30)

## கலந்துரையாடலும் நிர்வாகத் தெரிவும்

(யாழ்ப்பாணம்)

யாழ் பொதுசன நூலகத்தின் அபிவிருத்திக்கான ஆலோசனைக் கலந்துரையாடலும், ஆலோசனைக் குழுவிற்கான நிர்வாகத் தெரிவும் இன்று ஞாயிற்றுக்கிழமை நூலக கேட்போர் கூடத்தில் காலை 9.30 மணியளவில் இடம் பெறும். (நி-8)



கிளிநொச்சி மாவட்டத்தின் பன்னாட்டு மகளிர் தின நிகழ்வு நேற்று கூட்டுறவு மண்டபத்தில் நடைபெற்றது. (படம்- தேவானந்தன்)

# அதானியின் காற்றாலை திட்டம் இன்னமும் ரத்து செய்யப்படவில்லை

## தெளிவுபடுத்திய வலுசக்தி அமைச்சர்

(கொழும்பு)

**அதானி நிறுவனத்துடன் மேற்கொள்ள திட்டமிடப்பட்ட காற்றாலை மின் திட்டம் இன்னும் இரத்துச் செய்யப்படவில்லை என வலுசக்தி அமைச்சர் குமாரஜயகொடி தெரிவித்தார்.**



பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத் தொடருக்கான வலுசக்தி அலுவல்கள் பற்றிய அமைச்சரின் ஆலோசனைக் குழுவின் முதலாவது கூட்டம் அமைச்சரின் தலைமையில் கடந்த வியாழக் கிழமை பாராளுமன்றத்தில் இடம்பெற்ற போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்தக் குழுவில் பங்கேற்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் அதானி திட்டம் குறித்து வினவியதற்குப் பதிலளித்த வலுச் சக்தி அமைச்சர் குமார ஜயக் கொடி மேலும் தெரிவிக்கையில்,

அதானி நிறுவனத்தின் மின் திட்டத்தின் கட்டணங்கள் அதிகமாக இருந்ததால், அதை மீண்டும் மறுபரிசீலனை செய்ய அமைச்சரவைக்கு முன்வைக்கப்பட்டதாகவும் அந்த சந்தர்ப்பத்தில், இந்தத் திட்டத்திலிருந்து விலகுவதாக இலங்கை முதலீட்டு சபைக்கு இந்திய அதானி தாய் நிறுவனத்திலிருந்து ஒரு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாகவும் அதற்கமைய முதலீட்டு சபை இது குறித்து அமைச்சுக்கு அறிவித்துள்ளது.

எனினும், காற்றாலை மின் திட்டம் தொடர்பாக இலங்கையில் உள்ள அதானி நிறுவனத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் நிறுவனத்துடன் கலந்துரையாடல் நடத்தப்பட்டுள்ளது.

எனவே இந்த விடயத்தைப் பரிசீலிக்குமாறு அந்த நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, கடிதத்தை அனுப்பி இரண்டு வாரங்களுக்குள் பதில் எதிர்பார்க்கப்படுகின்றது.

அதனால், இந்த இரண்டு வாரங்களில் எதிர்மறையான பதில் கிடைக்கப்பெற்றால் மாத்திரம் ஏனைய மாற்றீடொன்றுக்கு செல்லவேண்டிவரும்.

எதிர்காலத்தில் இவ்வாறான திட்டங்களை அரசாங்கங்களுக்கிடையில் ஒப்பந்தங்கள் மற்றும் போட்டியான கொள்முதல் மூலம் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது என மேலும் தெரிவித்தார். (6-8)

# கடன் அட்டை பயன்பாடு நாட்டில் அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டில் புதிய கடன் அட்டைகளும் கடன் அட்டை பயன்பாடுகளும் அதிகரித்துள்ளதாக தரவுகள் தெரிவிக்கின்றன.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 1,951,654 ஆக இருந்த கடன் அட்டைகளின் எண்ணிக்கை டிசெம்பர் மாதம் 1,970,130 ஆக அதிகரித்துள்ளது.

மத்திய வங்கியின் தரவுகளின்படி, 2023 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் கடன் அட்டைகளின் எண்ணிக்கை 1,917,085 ஆக காணப்பட்டது. அதனுடன் ஒப்பிடும்போது 2024 ஆம் ஆண்டு கடன் அட்டைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

அந்தவகையில், 2024 ஆம் ஆண்டும் நவம்பர் மாதம் கடன் அட்டை பயன்பாடுகளால் கிடைக்கப்பெற்ற நிலுவைத் தொகை 151,614 மில்லியன் ரூபாவாக காணப்பட்ட நிலையில், டிசெம்பர் மாதமளவில் 157,957 மில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 120 | 100 | 100 | 150 |
| உருளைக்கிழங்கு | 160 | 160 | 180 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 500 | 600 | 500 | 400-450 | 600 |
| தக்காளி | 100 | 120 | 100 | 100 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 200 | 200 | 200 |
| கோவா | 300 | 300 | 400 | 200 | 350 |
| கரட் | 800 | 700-900 | 1000 | 840 | 1000 |
| பூசணி | 120 | 150 | 150 | 80 | 150 |
| புடோல் | 150 | 140 | 150 | 100 | 200 |
| வாழைக்காய் | 150 | 100 | 120 | 80-120 | 200 |
| சின்ன வெங்காயம் | 250 | 250 | 300 | 250-350 | 300 |
| பெரிய வெங்காயம் | 200 | 180 | 180 | 140 | 160 |
| பாகற்காய் | 300 | 400 | 500 | 300-350 | 400 |
| வெண்டக்காய் | 250 | 300 | 200 | 250-300 | 400 |
| கருணைக் கிழங்கு | 180 | 200 | 150 | 150 | 200 |
| பயற்றங்காய் | 400 | 400 | 300 | 500 | 600 |
| லீக்ஸ் | 350 | 300 | 300 | 250 | 350 |
| பீற்றூட் | 150 | 150 | 150 | 150 | 200 |
| கறிமிளகாய் | 500 | 600 | 400 | 600 | 400 |
| முருங்கைக்காய் | -- | 2500 | 1500 | 2000 | 2400 |
| போஞ்சி | 100 | 300 | 300 | 300 | 400 |
| கத்தரிதம்புள்ள | 100 | 80 | 150 | 80 | 120 |
| கீரை – 1 பிடி | 120 | 120 | 150 | 60-70 | 200 |
| தேசிக்காய் | 200 | 250 | 100 | 300-350 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 300 | 200 | 150-250 | 220-270 |
| இராசவள்ளி | 400 | 400 | 500 | 400 | 500 |
| வெங்காயப்பூ | 100 | 100 | 150 | 50-100 | 200 |
| முள்ளங்கி | 100 | 200 | 150 | 120 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 90 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 60 | 80 | 50 | 100 |
| ஈரப்பலா | 150 | 100 | 50 | 100 | 200 |





பிறந்த தின வாழ்த்தும் பாராட்டுக்களும்

2024 ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் 156 புள்ளிகளைப் பெற்று, சித்தியடைந்த

செல்வன். துஷ்யந்தன் ஹரிப்புருசோத்

அவர்களின் பதினோராவது பிறந்த நாளாகிய இன்று (09.03.2025) பட்டங்கள் பல பெற்று பல்லாண்டு வாழ்க வாழ்கவென வாழ்த்துகிறோம்.

(சி-361டி)

வாழ்த்துவோர்-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# அமெரிக்காவின் வர்த்தகப்போர்
# எதிர்க்க இந்தியாவை அழைக்கும் சீனா



(பீஜிங்)
சீன இறக்குமதிகள் மீதான வரிகளை அமெரிக்கா 10 சதவீதத்திலிருந்து 20 சதவீதமாக இரட்டிப்பாக்கியது.

இதற்கு பதிலடியாக அமெரிக்க இறக்குமதிக்கும் சீனா வரி விதித்துள்ளது.

இதனால் சர்வதேச அளவில் வர்த்தகப் போர் மூளும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்தியாவும் சீனாவும் இணைந்து செயற்பட வேண்டியதன் அவசியம் குறித்து சீன வெளியுறவு அமைச்சர் வாங் யி பேசியுள்ளார்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை செய்தியாளர்களிடம் பேசிய வாங் யி, புதுடில்லியும் பீஜிங்கும் விரோதத்தை அதிகரிப்பதை விட கூட்டாளிகளாக இணைந்து செயற்படுவது நல்லது.

பரஸ்பர ஒத்துழைப்பு இரு நாட்டு மக்களின் அடிப்படை நலன்களையும் வலுப்படுத்தும்.

ஆசியாவின் இரண்டு பெரிய பொருளாதார நாடுகள் கைகோர்த்தால், சர்வதேச உறவுகளின் ஜனநாயகமயமாக்கல், உலகளாவிய தெற்கு நாடுகளின் வளர்ச்சிக்கான பிரகாசமான எதிர்காலம் இருக்கும்.

இந்தியாவும் சீனாவும் கூட்டாளிகளாக ஒருவருக்கொருவர் வெற்றி பெற ஒத்துழைக்க வேண்டும் என்று தெரிவித்தார். (நி-8)

# சர்வாதிகாரத்தின் உச்சம் வடகொரியா!

## தப்பி வந்தவர் கூறும் பகீர் தகவல்

(பியாங்யாங்)
உலக நாடுகளில் இருந்து துண்டிக்கப்பட்டு தன்னந்தனியாக தனக்கென தனித்த சட்டதிட்டங்களுடன் சர்வாதிகார ஆட்சியின் கீழ் உள்ள நாடு வட கொரியா. கடந்த நூற்றாண்டு தொட்டு ஒற்றைக் குடும்ப ஆட்சியின் கீழ் வட கொரியா இயங்கி வருகிறது. அதன் தற்போதைய ஜனாதிபதியாகவே கிம் ஜாங் உன் உள்ளார்.

வடகொரியாவின் மக்களின் வாழ்க்கை நிலை குறித்து வெளியுலகிற்கு இன்னும் புதிரானதாகவே இருந்து வருகிறது. கடுமையான கட்டுப்பாடுகளுடன் மக்கள் தங்கள் அன்றாட வாழ்நாளை கடத்தவே மிகவும் சிரமப்படுகின்றனர் என்பது தென் கொரியா மற்றும் பிற உலக நாடுகளின் கூற்று.

அத்தகு அடக்குமுறைகளிலிருந்து யாரும் வெளிநாடுகளுக்கு தப்பிக்க முயன்று பிடிபட்டால் சித்திரவதைக்கும் கடுமையான தண்டனைக்கும் உள்ளாவார்கள். 1950களில் இருந்து குறைந்தது 30,000 வட கொரிய குடிமக்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. தப்பியோடியவர்களில் பெரும்பாலானவர்கள், தென் கொரியா, சீனா, ஐரோப்பா அல்லது அமெரிக்காவில் குடியேறினர்.

அவர்களில் ஒருவர் திமோதி சோ. இரண்டு முறை முயற்சித்த பிறகு திமோதி நாட்டை விட்டு தப்பிச் சென்று தற்போது இங்கிலாந்தில் மனித உரிமை ஆர்வலராகப் பணியாற்றுகிறார். வடகொரியாவில் மக்களின் வாழ்க்கை குறித்து சமீபத்தில் அவர், நிகழ்ச்சியில் பேசினார்.



அவர் கூறியதாவது, வட கொரியாவில் ஒருவர் ரிவி வாங்கினால், ஒரு அரசு அதிகாரி அவரது வீட்டிற்கு வந்து, அரசு நிகழ்ச்சிகளை மட்டுமே பார்க்கிறாரா என்று சரிபார்க்கிறார்.

வீட்டில் நிறுவப்பட்ட அனைத்து அன்ரெனாக்களும் அகற்றப்பட்டு, ஒரே ஒரு அன்ரெனாவுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும். இதன் மூலம் கிம் ஜாங் உன்னின் பிரசாரத்தை மட்டுமே அரசாங்க சனலில் காண முடியும். வேறு எந்த சனலையும் யாராவது பார்க்க முயற்சித்தால், அவர்கள் கடுமையான விளைவுகளைச் சந்திக்க நேரிடும்.

இந்த விதியை யாராவது மீறினால், அவர்கள் சிறையில் அடைக்கப்படுவார்கள். சில சமயங்களில் அவர்கள் கடுமையான சித்திரவதைகளையும் சந்திக்க நேரிடும். வட கொரியாவில் மக்கள் தங்கள் விருப்பப்படி முடியை வெட்டக் கூட அனுமதிக்கப்படுவதில்லை.


பள்ளி செல்லும் குழந்தைகள் மூன்று வகையான சிகை அலங்காரங்களில் ஒன்றை மட்டுமே தேர்வு செய்ய அனுமதிக்கப்படுகிறார்கள். அங்குள்ள முடி திருத்துபவர்கள் கூட வேறு எந்த வகையான சிகை அலங்காரத்தையும் வெட்டத் துணிவதில்லை.

அரசாங்கத்தால் பரிந்துரைக்கப்பட்ட ஸ்டைலிலிருந்து வேறுபட்ட ஸ்டைலில் சிறுவர்கள் தலைமுடியை வெட்டினால், அவர்களது பெற்றோரை காவல் நிலையத்திற்கு வரவழைத்து வாக்குமூலம் பதிவுசெய்வார்கள். பல நேரங்களில் மக்கள் தங்கள் தலைமுடி காரணமாக கடுமையான சித்திரவதைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

இத்தகைய விதிகள் காரணமாக, அங்குள்ள மக்கள் எப்போதும் அடக்குமுறை மற்றும் பயத்தின் சூழலில் வாழ்கிறார்கள். வாய்ப்பு கிடைத்தவுடன் அவர்கள் நாட்டை விட்டு வெளியேற காத்திருக்கிறார்கள் என்று தெரிவித்தார். (நி-8)

# ஈரானிடம் டீல் பேசும் ட்ரம்ப்
# கடிதம் மூலம் தூது

(வோஷிங்டன்)
அணுஆயுத ஒப்பந்தம் குறித்து பேச்சுவார்த்தை நடத்த விரும்புவதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஈரானுக்கு நேற்று முன்தினம் கடிதம் எழுதியுள்ளார். "நீங்கள்(ஈரான்) பேச்சுவார்த்தை நடத்துவீர்கள் என்று நம்புகிறேன், ஏனென்றால் அது ஈரானுக்கு மிகவும் சிறப்பாக இருக்கும்" என்று ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார்.



இதுதொடர்பாக நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஃபாக்ஸ் பிஸ்னஸ் நெட்வொர்க்குக்கு அளித்த பேட்டியில் ட்ரம்ப் பேசியுள்ளார். அவர் கூறியதாவது, "அவர்கள்(ஈரான்) அந்தக் கடிதத்தைப் பெற விரும்புகிறார்கள் என்று நினைக்கிறேன்.

நாம் ஏதாவது செய்ய வேண்டும், ஏனென்றால் நாம் மற்றொரு அணு ஆயுதத்தை அனுமதிக்க முடியாது" என்று தெரிவித்தார். ஈரானின் அணு சக்தி கட்டமைப்பு இஸ்ரேலுக்கு அச்சுறுத்தலாக விளங்கி வரும் சூழலில் ட்ரம்ப் இந்த முயற்சியில் இறங்கியுள்ளார்.

ட்ரம்பின் கடிதம் ஈரானின் உச்ச தலைவர் ஆயத்துல்லா அலி கமேனிக்கு அனுப்பப்பட்டதாகத் தெரிகிறது. இதுகுறித்து வெள்ளை மாளிகை விரிவான விளக்கத்தை வெளியிடவில்லை.

இதற்கிடையே ஈரானின் அணு சக்தி திட்டத்தைச் சுற்றியுள்ள சிக்கல்களை தீர்ப்பதற்கான சர்வதேச முயற்சிகள் குறித்து ரஷ்ய துணை வெளியுறவு அமைச்சர் செர்ஜி ரியாப்கோவ், ஈரானிய தூதர் காசெம் ஜலாலியுடன் விவாதித்ததாக ரஷ்ய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தவறுகளை நாம் அனுமதிக்கும் போதே அவை நம்மை தடம் மாற்றி விடுகின்றன.

– யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறும் மீனவர்கள்

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடித் தொழிலில் ஈடுபடுகின்ற தமிழக மீனவர்களால் நம் கடற்றொழிலாளர்கள் கடும் பாதிப்பை எதிர்கொள்கின்றனர்.

அதிலும் காலப்பிழை போல எங்கள் வடபுலத்துக் கடலில் தமிழக சகோதரர்கள் அத்துமீறி மீன்பிடிப்பதால், என்ன செய்வது ஏது செய்வது என்று தெரியாத நிலையில் நம் கடற்றொழிலாளர்கள் உள்ளனர்.

தவிர, இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடிக்கின்ற தமிழக மீனவர்களைக் கடற்படையினர் கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்துகின்ற சம்பவங்களும் நடந்தாகின்றன.

இவ்வாறு எங்கள் தமிழக மீனவச் சகோதரர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் நிறுத்தப்படும்போது, அதுகண்டு எங்கள் மனம் நொந்து கொள்கிறது. கூடவே சிலருக்குச் சிறைத்தண்டனையும் கிடைக்கிறது.

இதற்கும் மேலாக, அவர்களின் மீன்பிடிப் படகுகள் பறிமுதல் செய்யப்படுகின்றன.

இவ்வாறு சட்டம் நடைமுறையாகும்போது, சம்பந்தப்பட்ட தமிழக மீனவர்களுக்கு பெரும் பாதிப்பு ஏற்படுகிறதென்ற உண்மையையும் நாம் மறுக்கமுடியாது.

இருந்தும் இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடிப்பதை இன்னமும் எங்கள் தமிழக மீனவர்கள் நிறுத்திக் கொள்ளவில்லை.

மாறாக அத்துமீறல் தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

இங்குதான் ஒரு விடயத்தை நாம் கவனிக்க வேண்டியவர்களாக உள்ளோம். அதாவது, இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்த தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கைது செய்கின்ற போதிலும் குறித்த அத்துமீறல் தொடர்கிறதெனில், எங்கள் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடித் தொழிலில் ஒரு சிலர் மட்டும் ஈடுபடவில்லை என்பது உறுதியாகிறது.

மாறாக, ஏகப்பட்ட மீனவர்கள் இவ்வாறு அத்துமீறி மீன்பிடிக்கின்றனர் என்பதை இதிலிருந்து அனுமானிக்க முடியும்.

இங்குதான் எங்கள் தமிழகத்து மீனவச் சகோதரர்கள் ஓர் உண்மையைப் புரிந்து கொள்ள வேண்டும்.

அதாவது யுத்தத்தால் நொந்து கெட்டு பொருளாதாரத்தில் மிகவும் பலவீனப்பட்டுள்ள ஈழத் தமிழ்க் கடற்றொழிலாளர்கள் தொழில் புரிகின்ற கடற்பகுதிக்குள் நுழைந்து அங்கிருக்கக்கூடிய மீன்வளம் முழுவதையும் நீங்கள் வாரிச்சுருட்டிச் சென்றால், நம் மீனவர்கள் என்ன செய்ய முடியும்.

எனவே அன்புக்குரிய தமிழக மீனவர்களே! இலங்கைக் கடற்பரப்புக்குள் நுழைவதை முழுமையாகத் தவிர்த்து, எங்கள் சகோதரத்துவத்தைத் தொடர்ந்தும் பாதுகாக்க வேண்டும்.

அதேநேரம் குறித்த பிரச்சினை தொடர்பில் யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் தூதரகம் தலையிட்டு நிலைமையைச் சுமுகமாக்க வேண்டும்.

இதைச் செய்யத் தவறும்போது குறித்த விவகாரம் எங்கள் ஈழத்தமிழ் மக்களின் வாழ்வாதாரத்தில் – அரசியலில் – எங்கள் சகோதர உறவில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி விடும்.

ஆகையால் குறித்த பிரச்சினைக்கு விரைந்து முடிவு கட்டுங்கள்.

## பிள்ளைகளைத் தண்டிப்பதை தடை விதிக்கும் சட்டம் நிறைவேற்றப்பட வேண்டும்

### அமைச்சர் ஹர்ஷண நாணயக்கார

பிள்ளைகளைத் தண்டிப்பதற்குத் தடை விதிக்கும் சட்டம் ஒன்று மிகவும் விரைவில் நிறைவேற்றப்பட வேண்டும் என நீதிமன்ற மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் ஹர்ஷண நாணயக்கார தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் செலவின தலைப்பு மீதான குழுநிலை விவாதத்தில் நேற்று உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார். அமைச்சர் இதன் போது மேலும் தெரிவிக்கையில்,

“பெண்களைக் கண்ணியத்துடன் நடத்துவதற்கு வீட்டிலிருந்தே பெற்றோர் பழக்கினால் எதிர்காலத்தில் நல்லதொரு சமுதாயத்தைக் கட்டியெழுப்ப முடியும்.

சிறு வயது முதலே இது பெண்களின்வேலை, ஆண்களின் வேலை எனப் பிரிக்காமல் எல்லா வேலைகளையும் ஆண், பெண் என்ற பாரபட்சம் பாராது செயற்படும் பழக்கத்தை ஏற்படுத்தினால் அடுத்த இரண்டு பரம்பரைக்குச் சட்டங்களின் ஊடாக பெண்களுக்குப் பாதுகாப்பை ஏற்படுத்துவதை விட ஆண்களே பெண்களின் பாதுகாப்பாக அமைந்து விடுவார்கள்.

பெண்கள் சமூகத்துக்கு ஆற்றும் பங்களிப்புத்தொடர்பில் பார்க்கும் போது அவர்களுக்காக ஒரு நாள் மாத்திரமில்லை ஒரு வருடத்தை ஒதுக்கினாலும் மிகையாகாது.

பிள்ளைகளுக்கு வழங்கப்படும் தண்டனையை இரத்துச் செய்து சட்டம் ஒன்றை வெகு விரைவில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றிக் கொள்ள வேண்டும். தண்டனைகள் பிள்ளைகளின் அபிவிருத்தியில் பெரிதும் பாதிக்கின்றன என்றார். (ம-7)

## சேறுபூசும் அரசியல் கலாசாரத்தை அரசாங்கம் கைவிட வேண்டும்

### முன்னாள் எம்.பி பிரேம்நாத் சி

எதிர்தரப்பினர் மீது சேறுபூசும் அரசியல் கலாசாரத்தை அரசாங்கம் கைவிட வேண்டும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பிரேம்நாத் சி தொலவத்த தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று சனிக்கிழமை (08) இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

தமது இயலாமையை மறைப்பதற்காக ஏதேனுமொரு பெயர் பட்டியல்களை வெளியிடும் அரசாங்கம் தற்போது வீடுகள் பெற்றுக் கொண்டவர்கள் தொடர்பான பட்டியலை வெளியிட்டுள்ளது. வேலைத்திட்டங்களை முன்னெடுத்து மக்களின் ஆதரவைப் பெறுவதற்கு பதிலாக ஏனைய அரசியல்வாதிகள் மீது சேறு பூசுவதன் ஊடாக தனது இருப்பைத் தக்க வைத்துக் கொள்ள அரசாங்கம் முயற்சிக்கின்றது.

அன்றைய சந்தைப் பெறுமதிக்கமையவே அந்த வீடுகள் பெற்றுக் கொள்ளப்பட்டன. முற்பணம் மாத்திரமின்றி எஞ்சிய தொகையை இரு தவணைகளில் உரிய நேரத்தில் நான் செலுத்திருக்கின்றேன். மிகுதித் தொகையையும் அவ்வாறே செலுத்துவோம். இதில் என்ன நஷ்டம் என அரசாங்கம் கூறுகிறது.

இவ்வாறு பொய்யான பட்டியல்களை வெளியிடுவதில் மாத்திரமே இந்த அரசாங்கம் வெற்றி பெற்றுள்ளது. மக்கள் இதனைப் புரிந்து கொள்ள வேண்டும். பொய் கூறி மக்களை மேலும் ஏமாற்ற வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கின்றோம். ஜே.வி.பி.யே எமது வீடுகளைத் தீக்கிரையாக்கி எமது சொத்துக்களை அழித்தது. எனவே எமக்குக் கிடைக்கப் பெற்ற இழப்பீடுகள் குறித்துப் பேசுவதற்கு இவர்களுக்கு உரிமையில்லை என்றார். (ம-7)

மகளிர் தினத்தை முன்னிட்டு

## பெண் பணிகுழாமினருடன் பயணித்த ஸ்ரீலங்கன் விமான சேவை

(கொழும்பு)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு ஸ்ரீலங்கன் விமான சேவை கொழும்பிலிருந்து தாய்லாந்தின் பாங்கொக் நோக்கி முற்றிலும் பெண் விமானிகள் மற்றும் பெண் பணிகுழாமினருடனான விசேட விமானமொன்றை சேவையில் ஈடுபடுத்தியிருந்தது.

கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து காலை 7.30 க்கு புறப்பட்ட இந்த விமானம், பாங்கொக் சென்று மாலை 4.20 க்கு மீண்டும் நாடு திரும்பியது.

அனைத்து பெண்களின் தைரியம் மற்றும் அர்ப்பணிப்புக்குக் கௌரவம் அளிக்கும் விதமாக, சர்வதேச மகளிர் தினத்தன்று ஸ்ரீலங்கன் விமான சேவை ஒவ்வொரு ஆண்டும் விசேட விமானத்தை இயக்குகிறது.

இம்முறை இந்த விசேட விமான பயணத்தில் 130க்கும் மேற்பட்ட பயணிகள் பயணித்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விமானத்தில் மதினி விஜேசிங்க தலைமை விமானியாகவும், அயோத்யா ரணசிங்க துணை விமானியாகவும் செயற்பட்டிருந்தனர். (ம-7)

## பளையில் கிணற்றிலிருந்து ஆசிரியையின் சடலம் மீட்பு

கிளிநொச்சி, பளை வேம்பொடுகேணியில் கிணற்றிலிருந்து ஆசிரியை ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

தனிநபருக்குச் சொந்தமான காணியில் அமைந்துள்ள கிணற்றில் இருந்து மேற்படி ஆசிரியையின் சடலம் நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ளது.

அதே பகுதியைச் சேர்ந்த தவராசசிங்கம் சரஸ்வதி(வயது - 54) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

துர்நாற்றம் வீசுவதை அறிந்து அயலவர்கள் குறித்த கிணற்றை எட்டிப்பார்த்தபோது கிணற்றில் பெண் ஒருவர் சடலமாகக் காணப்பட்டார்.

இது தொடர்பில் பளைப் பொலிஸாருக்கு அறிவித்ததைத் தொடர்ந்து,

சம்பவ இடத்துக்கு வருகை தந்த பொலிஸார், சடலத்தை மீட்டு மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர். (ம-7)

## கம்பஹாவில் துப்பாக்கிச்சூடு

### இருவர் காயம்

(கம்பஹா)

கம்பஹா பொலிஸ் பிரிவிக்குட்பட்ட கிரிந்திவிட்ட - அகரவிட்ட பகுதியில் உள்ள மோட்டார் சைக்கிள் உதிரிப் பாகங்கள் விற்பனை நிலையத்தில் நேற்று (08) பிற்பகல் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமொன்று இடம் பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வருகைதந்த இருவரே குறித்த விற்பனை நிலையத்தின் மீது துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளனர். இதன் போது கடையில் இருந்த இருவர் காயமடைந்த நிலையில் கம்பஹா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் இருவரில்ஒருவரின் நிலைமை மிகவும் கவலைக்கிடமாக இருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த துப்பாக்கிச் சூட்டுக்கான காரணம் இதுவரை வெளியாகாத நிலையில் கம்பஹாப் பொலிஸார் சந்தேகநபர்களைக் கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் 16 ஆயிரம் ஏக்கரில்
# தென்னை செய்கை

## அமைச்சர் சமந்த வித்யாரத்ன தெரிவிப்பு

**(கொழும்பு)**

**36,000 ஏக்கரில் புதிதாக தெங்குச் செய்கையை முன்னெடுக்க திட்டமிட்டுள்ள தாக பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் சமந்த வித்யாரத்ன தெரிவித்துள்ளார்.**

வடக்கு தெங்கு முக்கோண வலயத்தில் 16,000 ஏக்கரிலும் ஏனைய பகுதிகளில் 20,000 ஏக்கர் பயிரிட எதிர்பார்த்துள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அலுவலகள் பற்றிய அமைச்சரின் ஆலோசனைக் குழு கூட்டத்தில் கலந்து கொண்ட போது அமைச்சரினால் இந்த விடயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.



தெங்குச் செய்கையை மேம்படுத்தும் நோக்கில் இந்த வருடத்தில் 2.5 மில்லியன் தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்யப்படுவதுடன் தெங்கு செய்கையின் ஊடாக 2,875 மில்லியன் தேய்காய்களை உற்பத்தி செய்வதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (நி-8)

# உள்ளூர் உற்பத்தியாளர்களின் விற்பனை சந்தை இன்று

(முல்லைத்தீவு)

உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்கும் நோக்குடன் உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கான விற்பனைச் சந்தை ஒன்று புதுக்குடியிருப்பு பிரதேச சபை பஸ்தரிப்பு நிலையைத்தில் இடம்பெறவுள்ளது.

தற்கால பொருளாதார நெருக்கடி காலத்தில், உள்ளூர் உற்பத்திகளை அதிகரிப்பதற்கும், உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் நோக்கோடும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவு, மகளிர் விவகார அமைச்சு, தொழிற் துறை திணைக்களம், புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம், புதுக்குடியிருப்பு பிரதேசசபை ஆகியவற்றின் அனுசரணையுடன் மாபெரும் பிரதேச விற்பனைச் சந்தை இன்று புதுக்குடியிருப்பு பிரதேசசபை பஸ்தரிப்பு நிலையத்தில் காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

குறித்த விற்பனைச் சந்தையில் புதுக்குடியிருப்பு பிரதேச உள்ளூர் உற்பத்தியாளர்களின் உற்பத்திகள் காட்சிப்படுத்தப்பட இருப்பதோடு தேவையான உள்ளூர் உற்பத்தியாளர்களின் பொருட்களை கொள்வனவு செய்ய முடியும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி-8-299)

# நடுக்கடலில் மிதந்த இலங்கை படகால் பதற்றம்

(கொழும்பு)

தமிழகத்தில் இலங்கை படகு ஒன்றை இந்திய கடலோரப் பாதுகாப்பு அதிகாரிகள் மீட்டுள்ளனர். தூத்துக்குடி மாவட்டம் சாத்தான் குளம் அருகே பெரியதாழை பகுதியில், நடுக்கடலில் இலங்கை பைபர் படகு ஒன்று கவிழ்ந்த நிலையில் நேற்று முன்தினம் மிதந்துள்ளது.

அப்பகுதிச் சென்ற மீனவர்கள் அந்த படகை மீட்டு கடற்கரைக்கு கொண்டு வந்தனர். 30 ஆண்டுகளுக்கு முந்தைய பழைமையான அந்த படகில், இலங்கை அரசின் முத்திரை காணப்பட்டதாக இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

இது குறித்த தகவலின் பேரில் தட்டார்மடம் பொலிஸார் மற்றும் கடலோரப் பாதுகாப்பு அதிகாரிகள் அந்த படகை ஆய்வு செய்தனர்.

இந்த படகு சட்டவிரோத செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்பட்டதா? என்பது குறித்து விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (நி-8)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>தகைமை/தொழில்: HNDA, விடுதி மேற்பார்வையாளர் (Gov)<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம், சைவம் விரும்பத்தக்கது<br>தொ.இ: B/15192 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 23 1/4<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BA, PGDE, Teacher<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: G/11592 |
| பிறப்பு:1994 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: Civil Engineer, பிரான்ஸ்<br>எதிர்பார்ப்பு: PR உள்ள பெண்<br>தொ.இ: B/15193 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 33<br>7 இல் செவ்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:Nursing Diploma, Nursing Officer<br>எதிர்பார்ப்பு: படித்த ஆண்<br>தொ.இ: G/14667 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:O/L, Business (own)<br>எதிர்பார்ப்பு:தகுதியான பெண்<br>தொ.இ:B/15194 | பிறப்பு: 1997 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 73<br>2 இல் செவ்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்:Bsc in Computer Science<br>எதிர்பார்ப்பு:அரச/தனியார் உத்தியோகம்,<br>தொ.இ: G/14669 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## 17 இந்திய மீனவர்களுக்கு
# 10 வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை விதிப்பு

(மன்னார்)

இலங்கை கடல் எல்லை பகுதியில் பல்வேறு சந்தர்ப்பங்களில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் 17 பேருக்கு 10 வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையும் மேலும் ஒரு மீனவருக்கு இரண்டரை லட்சம் ரூபாய் தண்டப்பணமும் விதித்து விடுதலை செய்யுமாறு மன்னார் நீதிமன்றம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை தீர்ப்பு வழங்கியுள்ளது

அதே நேரம் மேலுமொருவர் அனுமதிப் பத்திரமின்றி இலங்கை கடற்பரப்பிற்குள் நுழைந்து சட்டவிரோத மீன்பிடியில் இரண்டாவது தடவையாக ஈடுபட்டமை கண்டறியப்பட்ட நிலையில் குறித்த நபருக்கு 24 மாத சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக கடந்த 23/02/2025 தலைமன்னார் கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட 32 மீனவர்களில் நான்கு மீனவர்கள் முதல் குற்றத்துக்காக 10 வருட ஒத்தி வைக்கப்பட்ட சிறைத் தண்டனையுடன் நபருக்கு தலா இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வீதம் தண்டப்பணம் விதிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டதுடன் ஏனைய மீனவர்களை எதிர்வரும் 14 ஆம் திகதி வரை விளக்கமறியல் வைக்க நீதவான் உத்தரவிட்டார்

அதே நேரம் கடந்த 02/02/2025 கைது செய்யப்பட்ட 10 இந்திய மீனவர்களில் 9 பேர் முதல் குற்றத்துக்காக 10 வருட ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையுடன் நபருக்கு தலா இரண்டு லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வீதம் தண்டப்பணம் விதிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டதுடன் ஒருவர் இரண்டாவது தடவை இலங்கை கடற்பரப்பிற்குள் நுழைந்து சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்டமைக்காக 2 வருட சிறை தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கடந்த 20/02/2025 கைது செய்யப்பட்ட நான்கு மீனவர்களும் முதல் குற்றத்துக்காக 10 வருட ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையுடன் நபருக்கு தலா இரண்டு லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வீதம் தண்டப்பணம் விதிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் கடந்த வியாழக்கிழமை மன்னார் தாழ்வுபாடு பகுதியில் கைது செய்யப்பட்ட 14 மீனவர்களையும் எதிர்வரும் 14 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதவான் உத்தரவிட்டுள்ளார். (நி-8-285)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைத்...

ஏனைய கட்சிகளுடன் கலந்துரையாடுவது தொடர்பிலும் கடந்த மத்திய குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் முன்னேற்றம் தொடர்பிலும் இன்றைய தினம் அவதானம் செலுத்தப்படும் என சத்தியலிங்கம் மேலும் தெரிவித்தார். (ம-7)

## கரவெட்டியில்...

(வயது-14) என்ற மாணவனே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

மேற்படி மாணவன் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு தூக்கில் தொங்கி உயிரிழந்துள்ளார்.

மரணம் தொடர்பில் கரவெட்டி மரண விசாரணை அதிகாரி வே.பாஸ்கரன் விசாரணை மேற்கொண்டார். (ம-7,60)

## போதை தயா...

சந்தேகத்தில் 24 வயது இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்.மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கு அமைவாக வண்ணார்பண்ணை சிவன் கோயில் பின் வீதியான மானிப்பாய் வீதிக்கு அண்மித்த ஒருவீட்டில் வைத்து கஞ்சா கலந்த மாவா பாக்கு தயாரித்துக் கொண்டிருந்தபோது சந்தேகத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

இதன்போது கஞ்சா கலந்த 4 கிலோ 250 கிராம் மாவா பாக்கு, பீடித்தூள் 12 கிலோ 500 கிராம் மற்றும் வாசனைத் திரவியம் 24 ரின் போன்ற பொருட்கள் கைப்பற்றப்பட்டது.

இது தொடர்பில் மேலதிக விசாரணையினை யாழ்ப்பாண பொலிஸார் மேற்கொண்டு வருவதுடன் சந்தேக நபரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம-7,33)

## கல்சியம்...

இதனையடுத்து அவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இருப்பினும் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (ம-7,60)

## நிலையான பங்கு...

விக்கையில்,

இலங்கையை நிலையான மற்றும் சமநிலையான அபிவிருத்தியை நோக்கி நகர்த்தும் வேலைத்திட்டத்தின் கீழ் மறுசீரமைப்புத் திட்டத்தை பின்வாங்காமல் செயற்படுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தைச் சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிரிஸ்டலினா ஜோர்ஜிவா வலியுறுத்தினார்.

விசேடமாகத் தொழில்நுட்பம் மற்றும் உலக அரசியலின் துரித வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, நிலையான வகையில் மீண்டும் இயல்பு நிலைக்குத் திரும்பும் செயற்பாடுகளின் சவால் மிகுந்த தன்மையை அவர் ஏற்றுக்கொண்டதோடு, இலங்கையின் நிலையான பங்குதாரராகச் சர்வதேச நாணய நிதியம் செயற்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அனைத்துத் துறைகளும் உள்ளடங்கும் அபிவிருத்தி, வறுமை ஒழிப்பு மற்றும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தலுக்காக இலங்கை மேற்கொள்ளும் முயற்சிகளுக்குத் தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்க சர்வதேச நாணய நிதியம் தயாராக உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## ரணிலின்...

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

கடந்த அரசாங்கம் பயணித்த தொங்கு பாலத்திலே இந்த அரசாங்கமும் பயணிக்கிறது. அதே வழிமுறைகளையே பின்பற்றி வருகிறது.

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் முதன்மைச் செலவை 13 வீதமாக மாற்றியுள்ளனர்.

சர்வதேச நாணய நிதியத்துடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். இவ்வாறான பேச்சுவார்த்தையை நடத்த மாட்டார்கள் என்பது அரசாங்கத்தின் நடவடிக்கைகளில் இருந்து நன்றாகத் தெரிகிறது. இவ்வாறு போனால் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது. மற்றுமொரு கடன் மறுசீரமைப்பிற்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்படும்.

# சட்டவிரோத சொகுசு வாகனம் மீட்பு

(கொழும்பு)

போலி ஆவணங்களைத் தயாரித்து ஒருங்கிணைக்கப்பட்டிருந்த சட்டவிரோத சொகுசு வாகனமொன்று தெரணியாகலைப் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

அவிசாவளைப் பிரதேச குற்றவியல் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் அந்த வாகனம் கைப்பற்றப்பட்டதுடன், சம்பவம் தொடர்பில் இரண்டு சந்தேக நபர்களையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

விசாரணையில், சந்தேக நபர்கள் போலி செஸி எண்கள், என்ஜின் எண்கள் மற்றும் போலி இலக்கத் தகடுகளைப் பயன்படுத்தி வாகனம் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

குறித்த வாகனம் ஏதேனும் குற்றச் சம்பவத்திற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளதா? என்பதைக் கண்டறிய பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ம -7)

அரசியல் பாதுகாப்பைப் பெற்ற அனைத்துக் குற்றச்சாட்டுகள் மீதும் நடவடிக்கை எடுக்கும் என்றும் வட்டகல வலியுறுத்தினார். (ம-7)

அரசாங்கம் இவற்றை மறைத்து மக்களை முட்டாள்களாக்கியுள்ளது எனவும் எதிர்க் கட்சித் தலைவர் குறிப்பிட்டார். (ம-7)

## ரணி...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் அல் ஜசீராவுக்கு வழங்கிய நேர்காணலில் குறிப்பிடப்பட்ட, படலந்தா அறிக்கை தொடர்பான குற்றச்சாட்டுகளை விசாரிக்க அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும்.

அதேவேளை மத்திய வங்கிபிணை முறிமோசடி மற்றும் ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் குறித்தும் விசாரணைகள் நடத்தப்படும் என்றும் தெரிவித்தார்.

அத்துடன் இவை இரண்டும் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த காலத்திலேயே இடம் பெற்றுள்ளது.

அதேவேளை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் வெளிப்படைத்தன்மைக்கு உறுதி பூண்டுள்ளதாகவும், ரணில் விக்கிரமசிங்க முன்னர்


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2025.03.08
சீட்டிழுப்பு இலக்கம் 5769
T 8 7 6 3 3 0
அத சம்பத T 6 3 3 0
சீட்டிழுப்பு இலக்கம் 0344

தன நிதானய
திகதி - 2025.03.08
சீட்டிழுப்பு இலக்கம் - 1799
S 14 15 30 47 S
Double Chance 60776

மெகா பவர்
திகதி 08/03/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2117
V 05 31 63 69 73

ஜய JAYA
திகதி 2025.03.08
சீட்டிழுப்பு இலக்கம் 0037
F 0 0 4 2

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4011
சீட்டிழுப்பு திகதி 08.03.2025
X 35 37 41 71
X
தேசிய லொத்தர் சபை

ஹந்தஹன HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.03.08
சீட்டிழுப்பு இலக்கம் 1078
மீனம் 11 29 51 57 மீனம்
06231 10

உத்தியோகபூர்வ முடிவுகள்
08.03.2025 வெற்றி வாரம் 477
ஆங்கில எழுத்து Y
2 2 1 5 9 2
70412
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.33,108,659.20
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2743
சீட்டிழுப்பு திகதி 2025.03.08 தினம் சனிக்கிழமை
09 15 29 74 T
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.90,926,275.20
DLB

சனிதா
திகதி 08.03.2025 வெற்றி வாரம் 4904
03 11 40 53 T
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 56,129,646.00
88205
DLB

சசிரி
வெற்றி வாரம் 638
சீட்டிழுப்பு திகதி 08.03.2025
சனிக்கிழமை
16 27 47
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ.200,000.00
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4455
சீட்டிழுப்பு திகதி 08.03.2025 தினம் சனிக்கிழமை
11 17 32 44 சிம்மம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.17,410,850.40
135461
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
P 15 29 34 37 61
1919
08.03.2025
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.567,812,013.80
DLB

சனிக்கிழமை
வெற்றி வாரம் : 2569
சீட்டிழுப்பு திகதி : 2025.03.08
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.78,007,848.80
அத கோடிபதி ADA KOTIPATHI
06 34 43 48 K
893002
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## UK Student Visa

- No IELTS
- C pass in O/L English
- 100% Visa Guaranteed
- Travel within 3 weeks
- After Study Two(2) years work



Contact No : 077 780 3970

(3592)

## கனடாவில் PR வாய்ப்புக்கள்

கனடாவில் MARCH 31 இல் ஆரம்பமாகும் குடும்பத்துடன் நிரந்தரமாக குடியேறுவதற்குரிய கற்கைநெறி

CARE GIVER கற்கைநெறி — HOME SUPPORT WORKER & HOME CHILD CARE PROVIDER

கனடாவில் 50,000 க்கு மேற்பட்ட வேலை வாய்ப்புக்கள்

- G.C.E O/L
- 6 மாதங்கள்
- வார இறுதி நாட்கள் (சனி ,ஞாயிறு )
- 16 முதல் 50 வரை
- 50,000/-



NVQ/UK DIPLOMA சான்றிதழ்கள் வழங்கப்படும் (C-2413)

CIMS — 49A, CHAPPEL LANE JAFFNA (யாழ் பொது நூலகம் அருகில்) — 0777068777

## UK BUSINESS VISITOR VISA

லண்டனில் இடம்பெறும் LONDON TAMIL MARKET

வர்த்தக கண்காட்சியில்..

உங்கள் வியாபாரத்தினை (பொருட்கள்/உள்ளூர் உற்பத்தி பொருட்கள் / சேவைகள்) நீங்களே நேரடியாக சென்று சர்வதேச சந்தையில் விளம்பரப்படுத்த



- விசா விண்ணப்பங்கள்
- STALL BOOKING
- HOTEL BOOKING
- RETURN AIR TICKET
- பயண ஒழுங்குகள்

தொடர்புகளுக்கு

V2 TRAVELS 0777068777 (C-2413)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378 | 076 097 3127

## விசாக்கான (Show money)

வங்கி இருப்பு உறுதிப்படுத்தி தரப்படும்.

குறைந்த சதவீதத்தில்%

- Visit visa
- Student visa
- Fixed & saving

சகல நாடுகளுக்குமான விசா சேவைகள்

தொடர்புகளுக்கு : (907)

075 033 6759

## விற்பனைக்கு



நல்ல நிலையில் உள்ள (EY) இலக்க மொரிஸ் மைனர் கார் விற்பனைக்குண்டு..

076 693 2227
077 623 7416

(C-2414)

## விற்பனைக்கு



நல்ல நிலையில் உள்ள (7 Sri ) வோக்ஸ்வகன் கார் விற்பனைக்குண்டு..

076 693 2227
077 623 7416

(3617)

## காணி விற்பனைக்கு

யாழ். மாநகரசபை எல்லைக்கு உட்பட்ட ஆறுகால்மடம் பகுதியில் நெற்காணி 3 பரப்பு விற்பனைக்கு உள்ளது.

தொடர்புகளுக்கு :

077 282 8175

(C-2415)

## காணி விற்பனைக்கு

நீர்வேலிச் சந்தியில் அருமையான சூழலில் 7 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.

074 38 25 961
076 91 97 566
077 46 87 645

(3583)

## காணி விற்பனைக்கு

கல்வியங்காடு, புதிய செம்மணி வீதியில் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு

- கல்வியங்காட்டு சந்தியிலிருந்து 350 மீற்றர்
- நல்லூர் கந்தசுவாமி கோவிலிருந்து 1.7Km

077 185 4870

(3578)

## வேலையாட்கள் தேவை

வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள Village Hotel இற்கு

- Waiter
- House Keeper
- Kitchen Helper

அனுபவமுள்ளவர்கள் தேவை.

தொடர்புகளுக்கு

077 836 5722

(C-2408)

## யாழ்ப்பாணம் - திருச்சி விமான சேவைகள்

யாழ் - திருச்சி விமானப் பயணச் சீட்டுக்கள்

33,000/= இலிருந்து விசேட விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

மற்றும் அனைத்து நாடுகளுக்குமான ரிக்கற்றுக்களை எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

APEX TRAVELS

0777 597 598, 076 3333 644

இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். CTB பஸ் தரிப்பிடத்திற்கு அருகில்)

(909)

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்

IELTS, A1 UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN

GUARANTEED TO 7.5 in IELTS Exam.
PASS in UK A1 Exam.
Exam REGISTRATION CENTER.

Practical to UKVI on Computer

Special offer 50% Discount to all the Courses

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.

T.P : 077 780 3970, 074 007 1970

(3426)

## காணி விற்பனைக்கு

கொடிகாமம் பஸ் நிலையத்திலிருந்து பருத்தித்துறை வீதியில் 400m தூரத்தில் பிரதான வீதியில் இருந்து 50m தூரத்தில் இரண்டாவது காணியாக உள்ள 20 பரப்பு 6 குளி அளவுடைய மேட்டுக்காணி உடன் விற்பனைக்குள்ளது.

வீடு கட்டுவதற்கு உகந்த மேட்டுக்காணி 4 துண்டுகளாகப் பிரித்தும் வழங்கப்படும்

077 4366 704 / 075 1640 104

(908)

## Kithu Bus Booking

யாழ்ப்பாணம் > கொழும்பு
கொழும்பு > யாழ்ப்பாணம்
பருத்தித்துறை > கொழும்பு
கொழும்பு > பருத்தித்துறை

இரவு, பகல்

வெளிநாடுகளுக்கான விசேட ஆசனங்கள் பெற முடியும்.

077 893 5841
075 393 5841

(910)

தேன் ஒரு அருமருந்து, சீனிக்குப் பதிலாக தேனைப் பயன்படுத்துவதனால், இரத்தத்திலுள்ள சீனியின் அளவு சீராகி கொலஸ்ரோலின் அளவு குறையும். இதயநோய் தாக்காது. உடல் எடை குறையும். இவ்வாறு பல பயன்களைக் கொண்டது.

## Royal றோயல் சுத்தமான தேன்

உங்கள் முழுக் குடும்பத்தின் ஆரோக்கியத்தினைப் பாதுகாத்திட இன்றே பாவியுங்கள் றோயல் சுத்தமான தேன்.

ஆய்வுகூடத்தில் தரம் பரிசோதிக்கப்பட்டு பொதியிடப்படுகிறது.



குறிப்பு :- யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து பாமசிகளிலும், சுப்பர்மார்க்கட்களிலும், பலசரக்கு கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Marketed By:-
சிவா நறுமணப் பூங்கா®
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
குறிப்பு : (சத்திரத்துச்சந்திக்கு அருகாமையில்)
தொ.பே : 021 2222 567

Packed By:- Royal Industries®

(C-2412)

## வேலையாட்கள் தேவை

மானிப்பாயில் இயங்கிவரும் புடைவை விற்பனை நிலையத்திற்கு முன்அனுபவமுள்ள வேலையாட்கள் (ஆண்கள்) தேவை. முன்அனுபவமுள்ளவர்களுக்கு 45,000/= - 55,000/= வரை சம்பளம் வழங்கப்படும். பழக விரும்புவர்களும் விரும்பத்தக்கது. வயது எல்லை - 30 தொடக்கம் 45 வயது வரை.

தொடர்பு: 077 560 4057

(3596)

## சேவை

முதியோர் பராமரிப்பு சேவை.

தொடர்பு கொள்ள வேண்டிய நேரம்
காலை 8.00 மணி தொடக்கம்
மாலை 9.00 மணி வரை

077 442 9869
077 069 3486
077 024 2031

(3615)

## வேலையாட்கள் தேவை

தச்சு வேலையில் அனுபவமுள்ள வேலையாட்கள் தேவை. தளபாட உற்பத்தி (வெளி மாவட்ட வேலை ஆட்களுக்கு தங்குமிட வசதி செய்து தரப்படும்)

இடம் : கோண்டாவில், யாழ்ப்பாணம்

தொடர்பு : 077 713 0872

(3613)

## ஓய்வு பெற்றோருக்கான வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல நிறுவனத்திற்கு ஆங்கிலத்தில் கடிதங்கள் எழுதக்கூடியவர்கள் தேவை. கணனி ரைப்பிங் தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது.

அடிப்படை சம்பளம் - 45,000/-

077 936 1427

NO.206, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் யாழ். நகர் பகுதி வெலிங்டன் சந்தியிலிருந்து ஆஸ்பத்திரி செல்லும் பொன்னம்பலம் பிரதான வீதியில் இருந்து 50 மீற்றர் தூரம் சகல ஆவணங்களுடன் இரண்டு பரப்பு மூன்று குளி காணி விற்பனைக்கு உண்டு. வீடுகள் அமைப்பதற்கும் ஏற்ற இடம்.

- யாழ். போதனா வைத்தியசாலை 100 மீற்றர்.
- கீல்ஸ் புட்சிற்றி 50 மீற்றர்.
- ஸ்ரான்லி றோட் வெலிங்டன் சந்தி 50 மீற்றர்
- 200 மீற்றர் யாழ். பஸ் நிலையம்.
- தரகர் தேவையில்லை.

076 755 8606, 077 638 5683

(3616)

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 223/= | |
| 1Kg சிவப்பு பருப்பு | - 269/= | |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 410/= | |
| 1Kg Prima கோதுமை மா | - 159/= | |
| 1Kg றவை | - 282/= | |
| 1Kg பொன்னி | - 240/= | |
| 1Kg தீட்டல் பச்சை | - 250/= | |
| 1Kg கடலை | - 420/= | |
| 1Kg வெள்ளை உளுந்து | - 780/= | |
| 1Kg வெள்ளைப்பச்சை(உள்நாடு) | - 215/= | |
| 10Kg விஜிதா நாடு | - 2920/= | ~~3000/=~~ |
| 1Kg ஈக்குத்தீட்டல் | - 220/= | |
| 1Kg சோயா | - 380/= | |
| 01 ஓசன் மீன்ரின் | - 380/= | ~~560/=~~ |
| 01 டசின் தீப்பெட்டி | - 170/= | ~~240/=~~ |

Max 01



999/= ~~1050/=~~ 400g Anchor



52/= ~~80/=~~ அங்கர் யோகட்

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி.

(909)

Happy Supermarket 0777 8080 30


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.03.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.